21—6—59 | வார வெளியீடு | விலை 16 காசு

ஏட்டுப் புலியா?

(ஆ. ஆரிது)

கண்ணின் மணியை மற்றொருவன்—தன்
கையால் தோண்டி எடுக்கையிலே
மண்ணில் வளருஞ் செடிகொடியாய்—ஒரு
மனிதன் வாளா இருப்பானா?
பெண்ணின் கற்பைச் சூறையிட—ஒரு
பேயன் முயலும் வேளையிலே
வண்ணத் தமிழின் குடிபிறந்தோள்—அவள்
மார்பில் புதைந்து மகிழ்வாளோ?

எந்தை நாட்டை, அன்னைமொழியை—தமிழ்
இனமே கொல்லல் வெட்கமையோ!...
செந்தேன் மொழியை, நம்தமிழை—ஈங்கு
சிலபே ரொதிக்கித் தள்ளிவிட்டு
சிந்தை ஏற்கா இந்தியெனும்—வட
சிறுமைக் காட்டின் நெருஞ்சியினைப்
பந்திப் பொருளாய் வைக்கின்றார்—நாம்
பதுங்கி வாழ்ந்தா லென்னபயன்?

நாட்டில் அடிமை நிலையினின்றும்—நாம்
நடமா டிடவே காணுகிறோம்!
வீட்டில் வறுமைச் சிறுமைகளும்—தினம்
வீங்கி வளர்தல் காணுகிறோம்!
காட்டில் மிருகங் கள்கூட—சில
காலம் எதிரி களைவீழ்த்தும்;
ஏட்டில் வரைந்த புலியாக—நாம்
இருந்து வாழ்ந்தா லென்னபயன்?

தமிழோசை-5

உ

கிருத்துவர் தமிழ்த் தொண்டு

ப. ஜோதிமுத்து

ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் எனவும், யாதும் ஊரே யாவரும் கேளிர் எனவும், எனைத்தானும் நல்லவை கேட்க, அனைத்தானும் ஆன்றபெருமை தரும் எனவும், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு எனவுமாக மிகப் பரந்த மனப்பண்பினைக் கொண்ட மாபெரும் மக்களைத் தோற்றுவித்த நம் தமிழகமும் தமிழ்மொழியும் தனிச்சிறப்புடையவை. வேறு எந்நாட்டிற்கும் எம்மொழிக்கும் இல்லாத தனித் தகைமை இவற்றிற்கு உண்டு எனில், அது மிகையாகாது.

தொகை நூற் காலத்தை அடுத்துவரும் காவியங்களில், அருக வணக்கமும் புத்த வழிபாடும் சிறந்து விளங்குவதை நாம் கண்ணுறுகின்றோமன்றோ! சேரலர் செம்மல் இளங்கோவடிகள் படைத்த காவியத்தில், அக்காவியப் பாத்திரங்கள் வாயிலாக, அருகன் பெருமையும், புத்தர் புகழும் இலங்கிக் காட்சியளிக்கின்றன! சாத்தனார் கண்ட மணிமேகலை துறவு புத்தமதக் காவியமன்றோ!

அங்ஙனமே, திருத்தக்க தேவரது சீவக சிந்தாமணி அருக சமயத்தின் அருங்கலம் எனலாம். கல்லாடனார் யாத்த கல்லாடம் சாலச் சிறப்புடையது.

இந்த வரிசையிலேயே கிருஸ்து சமயமும் நம் நாட்டில் இடம்பெற்றது. அம்மார்க்கத்தைத் தழுவியவர்கள், அதில் செய்யப்படும் வழிபாட்டையும், இயல்பையும், எடுத்துக் கூறுங்கால், நம் தமிழ் அன்னைக்குச் சிறந்த தொண்டு ஆற்றியுள்ளார்கள். கிருஸ்து சமயம் கி. பி. முதல் நூற்றாண்டிலேயே சேரநாட்டில் இடம் பெற்றுள்ளது என்பது ஒரு சாரார் கொள்கையென்றும், அச்சமயத்தினர் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் தொண்டுசெய்யத் தொடங்கியது கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னரேதான் என்பதும் வரலாறு உணர்த்துவது.

கிருஸ்தவர் தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் செய்திருக்கின்ற தொண்டை முதன் முதலாகத் திறம்பட நூல் வாயிலாக எடுத்துரைத்த பெருமை, மயிலை, சீனி. வேங்கடசாமி அவர்கட்கே உரியது. அன்னார் *1936*-ம் ஆண்டில் கிருத்துவமும் தமிழும்—கிருத்துவரால் தமிழ் மொழிக்கு உண்டான நன்மைகளைக் கூறும் நூல்—என்ற தலைப்புத் தாங்கிய ஒரு நூலை எழுதி வெளியிட்டனர். *1948*-ல் தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள மூன்றும் பதிப்புப் பதிப்புரையில், கிருஸ்தவர் தமிழ்த் தொண்டு சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறப்பெற்றுள்ளது. அங்குக் கண்டிருப்பதாவது.

சிங்கப்பூர் 'தமிழ் முரசு' மலர் மூலம் தந்த கருத்து.

“தமிழ்நாட்டில் எழுதா எழுத்தாம் அச்சுப் பொறியை மேலை நாட்டினின்றுங் கொண்டுவந்து முதற்கண் நிறுவித் தமிழ் நூலும், செய்தித்தாளும் வெளிப்படுத்தி நம் பெருமக்களுக்குச் செய்த பேருதவி மேலை நாட்டினருக்கே உரித்து. பின், அவர்கள் தமிழின் இனிமை, மென்மை, எளிமை, தூய்மை, வாய்மை, முறைமை, தனித்தியங்கும் வன்மை, தொன்மை முதலியவற்றில் ஈடுபட்டுத் துறைபோகக் கற்று, ‘நவில்தொறும் நூனயம் போலும்’ என்னும் தமிழ் மறைக்கு எடுத்துக்காட்டாய்ப் பயில்தொறும் தமிழின் பண்பில் இன்புற்றுத் தாம் பெற்ற இன்பம் வையகம் பெறுமாறு’ நம் செந்தமிழ்க்கண் உரைநடை நூலும், செய்யுள் நூலும், மொழிபெயர்ப்பு நூலும் பல வியற்றிப் புகழ்பெற்றனர். அம்மட்டோ! தமிழின்கண் உலகுக்கே ஒரு மறையாய், ஒரு மறை முடிவாய், நிறை பொருண் முடிவாய் நின்றிலங்கும் திருக்குறள், முதலியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தாம் பிறந்த நாட்டுக்கும் பேருதவி செய்து புகழ் பெற்றனர். இது, மொழித் தொண்டே முதன்மை பெற்றதென்பதைக் காட்டுவதன்றோ!” என்பதாம்.

இக்கூற்றுக்களில் அந்நூலின் பொருள் முழுவதையும் பதிப்புக் கழகத்தார் தொகுத்துக் கூறிவிட்டனர்.

மேலும் அந் நூலுக்கு முகவுரை தந்துள்ள முப்பெரும் தமிழ் முதறிஞரில் ஒருவராகிய ச. த. சற்குணர் தாம் ஆங்கிலத்தில் வரைந்துள்ள பகுதியில், கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர் எவ்வெத் துறைகளில் வழிவகுத்துச் சென்றிருக்கின்றனர் என்பதை மிகவும் உவகையுடன் உரைத்திருக்கின்றார். அதனையும் ஈண்டு குறிப்பிடுவது நலமாகும்.

“கிருஸ்தவர்கள் தமிழ் நெடுங்கணக்கை (அரிச்சுவடியைத்) திருத்தியமைத்தனர். மொழி பிளந்து எழுத வழிகாட்டினர். தமிழில் முதன் முதலாக நூல்களும், செய்தித் தாள்களும் அச்சிட்டவர்கள் அவர்களே. உலகத்தின் நாகரிகமடைந்த நாடுகளில் தமிழ் மொழியை முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர்களும் அவர்களே. ஐரோப்பிய மொழி நூல்களைத் தமிழில் முதன் முதலாகப் பெயர்த்தவர்களும் அவர்களே. மேனாட்டு மொழிகளிலுள்ள அகராதிகளுக்கொப்ப, தமிழில் முதன் முதலாக ‘அகராதி’ வகுத்தவர்

(4-ம் பக்கம் பார்க்க)

புதிய கட்சி!

17] ஆண்டுச் சந்தா ரூ. 8. (21—6—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 4

"காங்கிரஸ் என்றென்றும் பதவியில் இருக்கவேண்டுமென்கிற ஆசையால், கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி ஆகியவைகளின் கொள்கைகளையெல்லாம் சுவீகாரம் செய்துகொண்டு, நாட்டுக்குச் சொல்லி முடியாத துன்பங்களை விளைவித்து வருகிறது"

என்ற பீடிகையோடு அன்பர் ஆச்சாரியார் ஒரு புதிய கட்சியைச் "சுதந்திரக் கட்சி" என்ற பெயரோடு தோற்றுவித்திருக்கிறார்.

இந்தப் புதிய கட்சியால் நாடு நலம் பெறுமா? மக்கள் பயன் அடைவரா? என்பன போன்ற நாட்டின் அடிப்படைத் தேவைகள்பற்றி ஆராயும் நோக்கமோ தேவையோ இங்கு எழவில்லை. ஏனென்றால், காங்கிரசோ அல்லது அதன் நிழலாக உருமாறிய வேறெந்தக் கட்சியோ இதுவரை இந்த நாட்டுக்குச் செய்து வந்த 'நன்மை'களை நாம் அறிவோம்—நாடும் அறியும்.

ஆனால், இப்படிப் புதிய கட்சிகள் அவ்வப்போது முளைக்கக் காரணம் என்ன? ஏன் முளைக்கின்றன? எப்படி முளைக்கின்றன? எதனால் முளைக்கின்றன? என்பன போன்ற ஐயப்பாடுகளைத் தெளிந்தறிய முயல்வோருக்கு, அவற்றின் காரணங்கள் மிக எளிதில் புலனாகிவிடும்.

அன்பர் ஆச்சாரியாரும், இப்புதிய கட்சியின் தலைவர் என்று தெரிவிக்கப்படும் என். ஜி. இரெங்கா அவர்களும் காங்கிரசுக்காரர்களே என்பதை எவரும் அறிவர்.

இந்த உபகண்டத்தின் பலம் பொருந்திய—மக்கள் ஆதரவுபெற்ற— தியாக முத்திரை பெற்று ஆங்கிலேயனையே இந்நாட்டை விட்டு விரட்டிய கட்சி ஒன்று இருக்குமானால், அது, அறுபதாண்டுகட்கு முன்பே முளைத்து—வளர்ந்து—கிளைத்து, யாராலும் அசைக்கமுடியாதென்று கூறப்பட்ட காங்கிரசுக் கட்சியாகும். அதன் செல்வாக்கையும் சிறப்பையும் வேறு எந்தக் கட்சியும் பெற்றுவிட முடியாதென்று பேசாத காங்கிரசுக்காரரை, நாம் பத்தாண்டுகளுக்கு முன் சந்திக்கவே முடியாதிருந்தது. காங்கிரசுக் கட்சியில் எந்தவிதமானஓட்டைவிழுந்தாலும்,அதைஎப்படியாவது, எதனாலாவது ஒட்டி மறைக்க முயல்வார்களே ஒழிய, அதன்மீது எந்தவிதமான குறையும் சொல்ல மாட்டார்கள்—மற்றவர்களையும் சொல்லவிடமாட்டார்கள்—அப்படியும் மீறி, நம்மைப் போன்ற எதிர்க் கட்சியினர் யாராவது, காங்கிரஸ் இன்னின்ன விதத்திலே தவறு செய்கிறதென்று குற்றஞ் சாட்ட முற்பட்டாலோ, அவ்வளவுதான், குமுறியெழுந்து கொக்கரிப்பார்கள், இவர்கள் எல்லாம் ஆங்கிலேயனின் அடிவருடிகள் என்று மிக மிக அநாயாசமாக—அலுப்புத் தட்டாமல் கூறிவிடுவார்கள்.

ஆனால், இன்று காங்கிரசின் நிலை என்ன? எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம். எண்ணிப் பார்க்கும் எண்ணம் எழவில்லையானால், ஆச்சாரியாரை அணுகிப்பாருங்கள் — இரெங்காவை நெருங்கிப்பாருங்கள்; அவர்கள் கூறுவார்கள் உண்மையை. இல்லை, கூற மாட்டார்கள், கேட்பார்கள், 'தெரியவில்லையா' என்று. எது தெரியவில்லையா என்று கேட்கிறீர்கள் என்றாலோ, நாம்தான் புதிய கட்சியை ஆரம்பித்திருக்கிறோமே!

காங்கிரசுக்காரர்களாகப் பல காலம் இருந்து பணிபுரிந்து—தியாகத் தீயில் குளித்துத் தேசத்தை மீட்கும் பெரிஞ் செயல்புரிந்த நாங்களே புதிய கட்சி ஒன்றைத் துவக்கி, அதன் வாயிலாகத்தான் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்ய இயலும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோமென்றால், அதன் காரணத்தைப் புரிந்துகொள்ளும் அரசியல் நுட்பம் கூடத் தெரியாமல், காங்கிரசின் இன்றைய நிலை என்ன என்று எண்ணிப் பாருங்கள் எனக் கேட்கலாமா என்று கோபிப்பார்கள்போல் தெரிகிறது.

புதிய கட்சியைத் துவக்கியுள்ள அன்பர்கள் அவ்வளவு ஆவேசத்தோடு பேசுகிறார்கள். புதிய கட்சி துவக்க நேர்ந்ததன் காரண காரியங்களைப் பிட்டுப் பிட்டுக் காட்டுகிறார்கள்.

காங்கிரஸ் என்ற படகில் ஏற்பட்டிருக்கும் ஓட்டைகளை எங்களால் அடைக்க முடியாதென்பதை நன்குணர்ந்த பின்னரே, 'சுதந்திரக்கட்சி' என்ற படகை உண்டாக்க முற்பட்டு அதற்குரிய பணிகளைச் செய்து வருகிறோம் என்று கூறுகிறார்கள்.

எனவே, இப்படிப் புதிய கட்சிகள் துவக்கப்படுவதையோ, அல்லது அவற்றால் நாட்டுக்கு நன்மைகள் ஏற்படுமா என்பதனை ஆராய்வதையோ விட, காங்கிரசின் கடைசிக்காலம் மிக அண்மையில்உள்ளது என்பதனையே இப்புதுக்கட்சிகளின் தோற்றம் காட்டுகின்றன என்று கூறி, இப்புதிய கட்சியைப்பற்றி இப்போதைக்கு இந்த அளவுவோடு நிறுத்திக் கொள்கிறோம்.

*

2-ம் பக்கத் தொடர்ச்சி

களும் கிருஸ்தவர்களே. இயற்கை விஞ்ஞானத்தைப்பற்றித் தமிழில் இவர்கள்தான் முதன் முதலாக நூலியற்றியிருக்கிருர்கள். பெரு நூல்களைச் சுருக்கித் தரவும், சுவை மிகுந்த, நலம் பயக்கும் இலக்கியங்களைப் படைக்கவும் இவர்கள்தான் முதன் முதலில் தூண்டிவிட்டனர். நமது மொழி, இலக்கியம், இலக்கணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்குரிய வழிவகைகளை இவர்கள்தான் முதன் முதலில் கையாண்டனர். எல்லாருக்கும் புரியாத மொழி நல்ல மொழியன்று என்பதனையும், எளிய வடையுள்ள நூல்கள் மக்கட்குக் கிடைக்காவிட்டால், அவர்களுக்குள் சமுதாய, நன்னெறி, அரசியல், பொருளாதார முன்னேற்றம் காணலரிது என்பதனையும் இவர்கள் முதன் முதலாக எடுத்துக் காட்டியதுமன்றி, உரைநடை நூல்கள் எழுதி, மக்களுக்குள் வாசிக்கும் பழக்கத்தையும் படைத்துவிட்டனர்.'' இவ்வாறு அப்பெரியார் கிருஸ்தவர்கள் தமிழுக்குச் செய்துள்ள பல்வகைத் தொண்டுகளின் முதன்மையையும் சிறப்பினையும் எடுத்துக் காட்டியுள்ளார். இப்பல்வேறு வகைத் தொண்டின் விளக்கமே அந்நூலில் கூறப்பெற்றுள்ளது.

இஃதன்றி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் உயர் திருவாளர் இரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் 'கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர்' என்ற தலைப்பில் ஒரு சிறு நூல் வரைந்துள்ளார்கள். இதிலும் மேலே குறிப்பிட்ட உண்மைகள் நன்கு விளக்கம் பெற்றுள்ளன.

இரு பிரிவினர்

தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் தொண்டு ஆற்றிய கிருஸ்தவப் பெரியார்களை இரு வகுப்பாகப் பிரிக்கலாம். முதல்வராக மேனாட்டுப் புலவர்களைக் குறிப்பிடலாம். அடுத்து நம் தமிழ் நாட்டுப் புலவர்கள் இடம் பெறுவர். காலத்தாலும் சிறப்பாலும் மேனாட்டினர் முதலிடம் பெறுவதற்குரியரே. எனவே, அவர்கள் வரிசையில் பலருடைய பெயர்கள் இடம் பெற்றுள்ளன. எனினும் ஈண்டுச் சுருக்கமாக ஒரு சிலரையே விதந்து கூறுவது ஒப்புடைத்தாகும். முதற்கண் கூறப்பெறும் தகுதியுடையவர் **வீரமா முனிவர்** என்ற சிறப்புப் பெயரால் வழங்கப் பெறும் பெஸ்கி (Beschi)ப் பெரியார் ஆவார். தமிழ் நெடுங் கணக்கைத் திருத்தியமைத்த பெருமையும், அகராதியமைப்புக்கு வழி வகுத்து, **சதுரகராதி** கண்ட பெருமையும், புதுமுறையில் இலக்கண ஆராய்ச்சி செய்துகாட்டிய நலனும் **பரமார்த்த குரு கதை** எழுதிய ஆற்றலும் அவரையே சாரும். காவியப் புலமையும் இவருக்கு இல்லாமலில்லை. **தேம்பாவணி** என்ற காப்பியமும் திருக்காவலூர்க் கலம்பகமும் இவர் இயற்றியனவாகக் கூறப்படுகின்றன. இவரைப் பற்றிய வரலாறு ஒன்றைப்பசுமலை உயர்நிலைப் பள்ளித்தமிழாசிரியர் திரு. சுந்தரம் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

அடுத்தபடியாகக் குறிப்பிடத் தக்க சிறப்பு வாய்ந்தவர் **கால்டுவெல் அத்தியட்சர்** ஆவார். இவர் பன்மொழிப் புலமை வாய்ந்திருந்தமையால், அப்புலமையினைத் தென்னுட்டு மொழி ஆராய்ச்சியில் பயன்படுத்தி, **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்**தைத் திரட்டிக் காட்டினர். வடமொழியினின்றும் தமிழும் ஏனைய தென்னுட்டு மொழிகளும் வேறுபட்டவையென்றும், வடமொழித் துணையின்றியே தமிழ் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்தது என்றும் முதன் முதலாக எடுத்துக்கூறிய புலமை இவருடையதே.

இன்னெரு துறையில் தனியிடம் பெற்று விளங்குபவர் **ஜி. யு. போப் ஐயரவர்கள்.** தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களில் சிலவற்றைத் தமது மொழியாகிய ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, பிறநாட்டு மக்கள் நமது மொழி, இலக்கியம், கலை, இவற்றைப் பற்றியறிய வழி திறந்து காட்டிய சிறப்பு இவருடையதே. **திருக்குறள். திருவாசகம், நாலடியார், திருவருட்பயன், நன்னூல்** ஆகிய நூல்களை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கின்ருர். இவரைப் பற்றிய வரலாறு ஒன்று திரு. அருள் தங்கையா அவர்களால் வெளியிடப்பெற்றுள்ளது. ஏனைய மேனாட்டுப் புலவர்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டின் பாகுபாடுகளை முன்னர் குறிப்பிட்டுள்ள நூல்களின் வாயிலாகத் தெரிந்து கொள்ளுக.

புதினத்திற்கு வழிகாட்டி

இனி நம் தமிழ் நாட்டுக் கிருஸ்தவப் புலவர்களில் காலத்தால் முற்பட்டவர் **வேதநாயகசாஸ்திரியாரவர்கள்.** இவர் தஞ்சை சரபோஜி மன்னரிடம் அவைக்களப் புலவராயிருந்தவர். நம் தமிழ் மொழியிலுள்ள. சிறு பிரபந்தங்களைத் தமக்கு ஆதாரமாகக்கொண்டு, அவை போன்றவற்றைக் கிருஸ்தவ சமயச் சார்பில் இயற்றியுள்ளார். எடுத்துக்காட்டாக ஞான உலா, ஞானக் கும்மி, பெத்தலேம் குறவஞ்சி முதலியவற்றைக் கூறலாம்.

வேதநாயகம் பிள்ளையவர்கள் இக்காலத்தில் வழங்கும் நாவல் என்னும் புதினத்துக்கு வழிகாட்டியவராவார். இவர்கள் எழுதிய **பிரதாப முதலியார் சரித்திரம்** என்பது இன்றும் நாம் படித்து இன்புறக் கூடியது. இசைப் புலமையும் இவர் கொண்டிருந்தமையாலும், இரைதுபரந்த மனப்பான்மையாலும் **சர்வ சமய சமரசக் கீர்த்தனை** என்னும் நூல் உருவாயிற்று.

கிருஷ்ணபிள்ளையென்னும்பெரியார் எழுதியுள்ள பெருங்காவியம் **இரட்சணிய யாத்திரிகம்** என்பது. ஆங்கில இலக்கிய வரலாற்றில் ஆங்கில விவிலிய நூலுக்கு அடுத்த பெருமை வாய்ந்ததாகக் கருதப்படுகிற 'மோட்சப் பிரயாணம்' (Pilgrim's Progress) என்னும் நூலைத் தழுவி இயற்றப்பட்ட இலக்கிய காவியம். ஏனைய புலவர்களில் தஞ்சை **ஆபிரகாம் பண்டிதரின்** அரியதொண்டு எடுத்துக் கூறற்பாலது. இசைத் துறையில் '**கருணமிர்த சாகரம்**' என்ற பெரு நூலை இயற்றிப் புகழ்பெற்றவர் அன்னார்.

இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இவ்விரு வகைப் புலவர்களும் தமிழுக்குத் தம்மாலியன்ற அளவு தொண்டுபுரிந்து வருகின்றனர். என்றே கூறலாம். **பாப்லி ஐயர்** அவர்கள் பல காலமாகத் தமிழ் மொழிப் புலமையும் இசைப் புலமையும் அடைந்து, திருக்குறளில் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கின்ருர்கள். இசையறிவு படைத்த தமிழ்ப் புலவர் ஒருவர் துணைகொண்டு, கீர்த்தனைகளும் இயற்றியிருக்கின்ருர்கள். **ஒயிட்ஸையர்** என்பார் தமிழ் இசையில் ஆர்வங்கொண்டு, பயின்று, சொற்பொழிவாற்றி அம்

(16-ம் பக்கம் பார்க்க)

எங்கும், எதிலும் இந்தி!

அன்றொரு நாள் அந்தி வேளையிலே பணியாற்றும் ஊரைவிட்டுப் பிறந்த ஊருக்கு நடைபோட்டுக் கொண்டிருந்தேன். "அடுத்துள்ள பர்லாங்கை அடையவேண்டுமானாலும், பஸ் ஏறிச் செல்லுகின்ற நவநாகரிகஉலகத்தில், நீஏன் தம்பி நடந்து சென்றாய்?'' என்று கேட்கிறீர்களா? ஏழ்மை என்னோடு விளையாடும்போது எப்படி நான் பஸ் ஏறிச் செல்லமுடியும்? நடந்தேன்: நடந்தேன் நடந்துகொண்டேயிருந்தேன். வானம் கருத்தது; வையகம் சற்று இருண்டது; கார் முகிலோ, நிலைமாறி வீசும் காற்றினுக்குப் பதில் கூற முடியாமல் அலைமோதியவாறு என்னை நோக்கி வந்துகொண்டிருந்தது. மேகத்தோடு மேகம் மோதும் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்: நீர்த் துளிகளை நிலத்திற்குப் பரிசாக அளித்துக்கொண்டிருந்தது கார் மேகம். அம்மழை என்னிடம் வெற்றி கண்டுவிட்டது. காற்றும் மழையும் கலந்தடித்தது.

நான் வந்து கொண்டிருந்த பாதையோரம் ஒரு சிறு வீடும் கிடையாது, என்ன செய்வதென்று புரியாத நேரம்; மரத்தடியில் நிற்க நினைத்தேன். "காற்றடிக்கும் வேளையிலே மரத்தடியில் நின்றால் என்ன ஆகுமோ? வேண்டாம்?'' என்றது என் அறிவு. அப்பாதையோரம் ஒரு தொலைக்கல் (மைல்கல்) நட்டிருப்பதைக் கண்டேன். சென்றதன் ஓரத்தில் உட்கார்ந்தேன். அவ்வளவுதான்! என் கண்கள் அந்தக் கல்லையே உற்றுப் பார்த்தன. என் கண்கள் கண்ட எழுத்துக்களைக் கையால் துடைத்தும் பார்த்தேன். மழையோ பலமாகப் பெய்துகொண்டிருந்தது. என் கண் இமைகளின் மேலும் நீர்த் துளிகள் வழிந்துகொண்டிருந்தன. அவற்றைத் துடைத்துவிட்டும் பார்த்தேன். "அப்போது சுத்த சித்தியோடுதானே தம்பி இருந்தாய்; இல்லை. ஒருகால்......?'' என்று கேட்கிறீர்களா? சுத்த சித்தியோடுதான் இருந்தேன். ஆனால் சோகத்தால் பாதிக்கப்பட்டேன். கார்த்துளிகளோடு, என் கண்ணீர்த் துளிகளும் சேர்ந்து மாநிலத்தை முத்தமிட்டுக் கொண்டிருந்தன.

"நனியுண்டு நனியுண்டு காதல்—தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ்மீதில்"

என்று முரசு கொட்டும் பாடலை என் மனக்கண்ணால் கேலியாகப் பார்த்தேன். என் உதடுகள் தானாக முணுமுணுத்தன.

சி. பெரியண்ணன்

தமிழ்மீது தமிழர்களுக்கு எங்கே அன்பிருக்கிறது? தென்குமரிப் பாண்டியர்கள் தென்றலோடு தமிழ் இசையைப் பரப்பினார்கள். கூடலத்துப் பாண்டியர்கள் புயலடித்த சோலையிலே எழுந்து தென்றலோடு தமிழ் இசையைப் பரப்பினார்கள். ஆனால்........? இன்று...! கனிபிழிந்த கன்னலின் சாற்றில் சாணத்தைச் சேர்த்தல் போலக் குடல் எழுப்பும் இந்தியைத் தமிழோடு கலந்திருத்தல் தகுதியா! 'இந்த ஊர் இவ்வளவு தூரமிருக்கிறது' என்பதைக் காட்டுவதற்காகப் பாதைகளில் நட்டிருக்கும் மைல் கல்களிலுமா இந்தி இடம் பெறவேண்டும்? தமிழகத்துப் பாதைமீது, வடபுலத்து இந்திக்காரன் எவன்வந்து தூரத்தைக் கணக்கிடப் போகிறான்? அனைத்திலும் மறைமுகமாய் இந்தியைப் புகுத்திவரும் இந்திய சர்க்கார், மைல் கல்களிலுமா இந்தியைப் புகுத்தவேண்டும்? அதற்கிசைந்த இம்மாநிலத்து மந்திரிகள் இந்திக்காரர்களா? இல்லை; இந்திக்காரர்களின் வாரிசுகளா? செந்தமிழில் எழுதியிருப்பதையே 'இதில் என்ன எழுதியிருக்கிறது?' என்று கேட்கும் தமிழர்கள் நூற்றுக்கு எண்பதுக்குமேல் இருக்கும்போது, இந்தியைப் பொறித்திருக்கும் சர்க்காரைக் கேட்கிறேன், இந்நாட்டுத் தொலைக்கற்களில் இந்தியில் எழுதியில்லாமையால், அவதியுற்ற மக்களின் தொகை எவ்வளவு என்று கணக்குக்காட்ட முடியுமா உங்களால்?

"அரசியல் அலுவல்கள் அனைத்தையும் தமிழிலேயே நடத்தப் போகிறோம்'' என்று முரசுகொட்டும் நம் அமைச்சர்கள் இதை அனுமதித்தது ஏன்? இது தமிழர்க்குச் செய்த துரோகமல்லவா? தமிழ் நிலத்து அரசு மேடைமீது வஞ்சம் மிகு நச்சுப் பாம்புகள், வடநாட்டு அமைச்சர் ஊதும் அதிகாரப் புன்னாகவராளிக்கு மயங்கிப் படமெடுத்துக் கொஞ்சு தமிழ் மாதைக் கொல்லச் சதிநடத்துகின்றன. தன்மானத்தையும், தாயின் மானத்தையும் காப்பாற்றும் தகுதி மிகு தமிழர்கள் தமிழகத்து அரசியலில் இருந்திருந்தால் தொலைக்கல்களில் இந்தியைப் பொறிக்கவிட்டிருப்பார்களா!

இப்படியெல்லாம் என் சிந்தனை அலைகள் உள்ளத்துக் கரையில் மோதின: கண்ணீரைத் துடைத்

துக்கொண்டே ஊரை நோக்கிநடை போட்டேன். இடைவழியில் ஓர் நகரத்தைக் கடந்துகொண்டிருந்தேன். அது சமயம் "ஆகாஷ் வாணி திருச்சிராப்பள்ளி" என்ற குரல் கேட்டது. வெந்த புண்ணில் வேல் பாய்ந்தால் என்ன ஆகும்? என் மனம் பட்டபாட்டை ஏட்டிலே எழுத முடியாது. எடுத்துச்சொல்லும் அளவுக்குக் கவனமும் குடிகொள்ளாமல் சென்ற நேரமது.

அந்தியோ சென்றாள்; அழகு நிலா அகிலத்தை வலம் வரக் கிளம்பிவிட்டாள். "அந்தியும் நிலவும், அன்பால் இணைந்த காதலரை அணுகினால் தண்ணென்னும்; அகன்று சென்றால் சுடும்— என்ற அனுபவத்தில் திளைக்க வேண்டிய பருவத்துக் காளை தான் நான். ஆனால் அப்பொழுது என் நெஞ்சத்தில் மஞ்சமிட்டுக்கொஞ்சிக் கொண்டிருந்தது கொடுமை மிகு இந்தச் சர்க்காரின் அநீதி ஒன்றே ஒன்றுதான. அதைத் தாங்கிக் கொண்டே இல்லமடைந்தேன். வழிமேல் விழிவைத்துப் பார்த்து, என் வரவைக்கண்டு 'வந்துவிட்டார் என்அத்தான்!என்றுசத்தான மொழி பேசிச் சாந்தி தருவதற்கு' என்றெண்ணி என் அருமைக் காதலியாள் 'இப்போதுதான் வருகிறீர்களா அத்தான்' என்றாள். 'ஆம்' என்று தலையசைத்து அருகில் சென்றேன். 'ஆ! மழையிலா நனைந்துவிட்டீர்கள். உடலெல்லாம் கனலாக இருக்கிறதே! கழற்றுங்கள் இந்த ஆடைகளை' என்றுரைத்துக் கனிமொழியாள் மாற்றுடையைக்கொண்டுவந்தாள். உடைகளை மாற்றிக்கொண்டு, வெந்த என் உள்ளத்து வேதனைக்குச் சாந்திதர முயற்சித்தேன். அதுபோது என் துணைவி 'சோர்ந்திருக்கிறீர்கள்; உணவுண்ண வாருங்கள் அத்தான்' என்றாள். 'இப்போது ஒன்றும் வேண்டாம்; இன்னும் சற்றுநேரம் கழித்து வருகிறேன்' என்றுரைத்து எழுந்தேன்; 'எங்கே போகப்போகிறீர்கள்? எங்கிருந்தோ இரண்டு கடிதங்கள் வந்திருக்கின்றன. அந்தப் பெரிய புத்தகத்தில் வைத்திருக்கிறேன்' என்றுரைத்தாள். சென்றந்தப் புத்தகத்தை எடுத்தேன். அந்த இரு கடிதங்களையும் வெவ்வேறு பக்கங்களில் வைத்திருந்தாள். முதலில் ஒரு கடிதத்தை எடுத்தேன். எங்கிருந்து வந்திருக்கிறது, என்று உற்றுப் பார்த்தேன். அங்கெல்லாம் இந்திதான் இடம் பெற்றிருந்தது. அந்த முடங்கலை அப்படியேகீழேவைத்துவிட்டு அப்புத்தகத்தில்அக்கடிதம் இருந்த பக்கத்தைப் பார்த்துவிட்டேன். விலைமதிக்கமுடியாத சில வரிகள் என் கண்களிலே பட்டன. என் அங்கமெலாம் பூரித்தது. வங்கத்தை வென்ற வண்டமிழர் வீரத்திற்கு வாழ்த்துரை கூறினேன்.

'தமிழகத்து மண்ணிலேயும், குணகடல் குமரிவரை தன்னை எதிர்க்க ஓர் தார்வேந்தன் இல்லையே!' என்று தினவெடுத்த தோள்களைக் கீறிக்கொண்டே, போரென்றால் பூரிப்போடுவிருப்புக் கொள்ளும் கரிகாற் பெருவளத்தான் வடதிசை நோக்கிப் போருக்குப் புறப்படத் திட்டமிட்டான். வாளையும், குடையையும், முரசையும் நன்னீராட்டிப் புறப்படச் செய்தான். மறக்குடி வீரர்களோ மைந்தனை வாரி மடிமீதிட்டு 'நான்மாண்டால் நீ வந்து மறங்காப்பாய்' என்று கூறி மார்தட்டி, மனைவிக்கு விடைதந்து போருக்குப் போக ஆயத்தமாக இருந்தார்கள். திக்கெட்டும் போர்முரசு முழங்கின. தீரர் கோட்டம் திரண்டது. இமயம் நோக்கிப் பீடுநடைபோட்டது. வடதிசையிலுள்ள வக்கற்ற சிற்றரசரெல்லாம் கைகட்டி வாய் பொத்தித் தலை தாழ்த்தி நின்றார்கள். பேரரசர் சிலர் எதிர்த்து நின்று போர்புரிந்து மறவர்குல மறத்தமிழர் வாள் முனைக்கு தலை வணங்கிச்சரணடைந்தார்கள். வடபுலத்து எல்லைவரை வெற்றிக் கொடி நாட்டிய கரிகாற்பெருவளத்தான் தலைநிமிர்ந்து இமயத்தைப் பார்த்துவிட்டான், "அடுக்கடுக்காய் வெற்றிகளை அணைக்க நினைத்தேன். ஆனால் இமயமலை குறுக்கிட்டு விலக்கிற்று.' மேலும் செல்ல விரும்பும் என்விருப்பம் பின்னிட்டு ஒழிந்தது. இம்மலை குறுக்கிட்டிராவிட்டால்......? உம்! சரி, பனிமலையில் கொடிபொறித்து நம் தாயகம் திரும்புங்கள்" என்றுரைத்து திரும்புங்காலை, கடல் சூழ்ந்த வச்சிரநாட்டரசன்,

"குறை தீர்க்கும் இறைவா! இறையாக இதைத் தருகிறேன். உள்ள நிறைவோடு பெற்றுக் கொள்ளவேண்டுகிறேன்." என்று பணிந்து நின்று முத்தின் பந்தரைக் கொடுத்தான். புத்தருக்குச் சிலை அமைத்து அகிலமெல்லாம் அவன் புகழைப் பாடுதற்கு அரும்பாடுபட்ட மகத நாட்டு அசோகன் பரம்பரையான், "மன்னர்க்கு மன்னவா!மண்டியிட்டுக்கெஞ்சுகிறேன், இதைத் தாங்கள் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும்." என்று கொடுத்தான் பட்டிமண்டபத்தை. அவந்திநாட்டு வேந்தன் உவந்து கொடுத்த தோரண வாயிலையும் பெற்றுக்கொண்டு வந்த வரலாறு கூறும் வரிகள்தான் இவைகள்:—

"செறுவெங் காதலின் திருமா வளவன்
வாளுங் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவர் உறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர் வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னாட்டு வாள் வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்தி வேந்தன் உவந்தவன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரண வாயிலும்

சிலப்- இந்திர. வரி—90—104

இவற்றைப் படித்த உடன் என் உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள் எழுந்தெழுந்து மறைந்தன.

"ஏன் அத்தான்! சிலையாகி விட்டீர்கள்? கடிதங்களை மட்டும் படித்துவிட்டு வாருங்கள்; நாளைக்கு மற்றவைகளைப் படித்துக்கொள்ளுவீர்கள். கண்ணுறங்கும் வேளையாச்சு" என்றெந்தன் கனிமொழியாள் கூறி நின்றாள்.

'இன்னொரு கடிதம்...' என்று தானாக முணங்கினேன். 'அக்கடிதமும் அப்புத்தகத்திலேதான் இருக்கிறது. பாருங்கள்!' என்றாள். இருக்கிறது, இருக்கிறது...என்று கூறிக்கொண்டே வேறு பக்கமிருந்த அக்கடிதத்தை எடுத்தேன். கடிதங்களிலிருந்த செய்திகளைப் படிக்க எனக்கு நேரமில்லை. துடித்த என்மனம் கடிதம் எடுத்து விரிந்துள்ள எட்டின் பக்கத்தையே பார்த்துப்பார்த்து இலயித்தது.

[அடுத்த இதழில் முடியும்.]

தோல்வி!

காவலன் மூன்றும் ஜியார்ஜ் கவலையில் விழுந்துவிட்டான். வந்துவிட்டது கஷ்டம்! பகலிலும், பக்கத்தில் இராணி படுத்திருக்கும் இன்ப இரவிலும், சிந்தனையிலேயே காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான். வேந்தனுக்குமா இது போன்ற இன்ப துன்பம் வாழ்க்கையில் வருகின்றது? வேதனையைப் போக்கும் மாமருந்தாம் வேல்விழிகளின் விளையாட்டும், கேளிக்கைகளும் அரண்மனையில் இல்லாமலா இருக்கும்? அதுஎன்ன குடிசையா!

என்ன இல்லை என்று கவலை? எது வேண்டுமென்று வருத்தம்? பருவ மங்கையர் அழகாக இல்லையா? பேரின்பத்தை அனுபவிக்க இயலாத அளவுக்குப் பணப்பெட்டி காலியாகிவிட்டதா? படையெடுத்து வருகிறேன் என்று பக்கத்து நாட்டரசன் மிரட்டுகிறானா? அதெல்லாம் ஒன்றுமில்லை. கொண்டுவந்த மதுவை, கோமானின் வாயிலே கோதையர் வைத்துக் குடிப்பாட்டி, கோப்பையிலே மிஞ்சியதைத் தாம் குடித்து, வெறிகொண்டு ஆடும் இளமங்கையர் திருநடனம் ஒன்று போதுமே, கொற்றவன் கவலையைப் போக்க! குத்தும் கண்களும் இதயத்தை அலைக்கழிக்கும் எடுப்பான உடலும் கொண்ட உல்லாசிகள், வேந்தரின் கிட்ட அமர்ந்து தொட்டுத் தொட்டு நடத்துகின்ற கொஞ்சல்நாடகத்திற்குப் பிறகுமா, கவலையின் சாயல் முகத்திலே ஒட்டிக் கொண்டிருக்கும்? மான்விழிமகளிர் கரம்பட்டால் மண்ணும் பொன்னாகுமே! அரசன் விரும்பினால் இன்னும் என்னவெல்லாமோ நடக்குமே! அதற்கெல்லாம் அரண்மனையிலென்ன பஞ்சமா? அப்படியென்ன பெரியதொரு சங்கடம் வந்து மன்னர் பிரானுக்கு மாட்டிக் கொண்டது! உண்ணவும்விடாமல், சரியாக உறங்கவும் விடாமல், அவரை வாட்டுகின்ற வருத்தம் எதுவாகத்தான் இருக்கும்?

அரசனுக்கு ஒரு பகைவன் இருந்தான். ஜான்வில்க்ஸ் என்பதுதான் அந்த விரோதியினுடைய பெயராகும். இவனைப் போல் அவனும் ஒரு நாடாளும் வேந்தன் அல்ல; எல்லோரையும் போலவே மிக மிகச் சாதாரண மானவன். அவன்தான் அரசனே அஞ்சக்கூடிய அளவுக்கு, மிகப் பெரிய எதிரியாக இருந்தான்!

'எப்படியாவது அவனைத் தொலைத்தேயாகவேண்டும்; இருக்குமிடம் தெரியாமலாக்கவேண்டும்;

வி. ஆர். துரை

எதைச் செய்யாவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள், இந்த 'நல்ல' காரியத்தை அவசியம் செய்தேயாக வேண்டும்; அன்றைக்குத்தான் நிம்மதியாகத் தூங்கமுடியும்; அன்றிரவுதான் அருமை மனைவியுடன் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி, பேசாத பேச்செல்லாம் பேசி மகிழவேண்டும்; அதுவரையில் எனக்கெதற்கு இந்த இன்பமெல்லாம்? உழைப்பால் உயரப் பார்க்கும் அவனை உருத்தெரியாமல் ஆக்குவதுதான், இப்போது எனக்கிருக்கும் முக்கிய முதல் வேலை; இரகசியத்தை எல்லாம் அம்பலத்திற்கு, அங்காடிக்கு கொண்டுவரும் அற்பனின், ஊரையும் பெயரையும் உலகோர் தெரிந்துகொள்ளக் கூடாது; பிச்சைக்காரனின் பெருமையைப் பொதுமக்கள் அறியக் கூடாது; அறிந்து கொள்ளும்படி விடக்கூடாது.' மனதிற்குள் இப்படித்தான் நினைந்து நினைந்து வெந்து வெந்து வேதனைப்பட்டு, நெருங்கிய நண்பர்களுடன் சதியாலோசனை செய்து, முடிவில்லாமல் யோசித்துக்கொண்டே இருந்தான்; ஒரு வழியும் வேந்தனுக்குப் புலப்படவில்லை.

எப்படியெப்படியோ திட்டமிட்டு, அவனை அடக்க ஒடுக்க நடவடிக்கை எடுத்துப் பார்த்தான். எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கவில்லை; நஷ்டம்தான் கண்ணிற்குத் தெரிந்தது. எதிரியோ வளர்ந்து கொண்டே வந்தான். மேலும் மேலும் மக்கள் அவனைத் தெரிந்து கொண்டே வந்தார்கள். மகா மன்னரின் பெருமை மக்களிடையே மண்ணாகிக்கொண்டே வந்தது. அவன் சம்பம் ஒன்றும் சாயவில்லை.

புலிக்கும் பூனைக்கும் பகை — யானைக்கும் எறும்புக்கும்விரோதம் — சிங்கத்திற்கும் சுண்டெலிக்கும் சண்டை—இப்படி மலையும் மடுவுமாக இருக்கின்ற வித்தியாசத்தை வில்க்ஸ் அறியாதவனா? நன்கு உணர்ந்தேதான் இந்த விஷப் பரிட்சையில் அவன் இறங்கியிருந்தான். பெரிய இடத்துப் பொல்லாப்பு எப்படியிருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளவே, அவன் பெரிதும் ஆசைப்பட்டான். விபரீத விளையாட்டுத்தான்!

அரசருக்கென்று நண்பர்கள் இருந்தார்கள். உண்மையிலேயே நண்பர் என்ற வார்த்தைக்கு

இவர்கள் யாருக்குமே சரியாக அருத்தம் தெரியாது என்று சொல்வதைக் கேட்டு நீங்கள் யாரும் சிரிக்கவேண்டாம்! வேந்தன் பணத்தைக் காட்டினுன். இரு கை நீட்டி, பல்லைக் காட்டி, யார் யார் வாங்கிக்கொண்டார்களோ, அவர்களெல்லாம் 'அரசரின் நண்பர்கள்' என்ற பட்டியலில் அடக்கமாகும். கொற்றவன் 'தூக்கென்ருல்' கையை உயர்த்துவர்கள் 'பேசாமல் இரு' என்ருல், ஊமையாக இருப்பார்கள். அரசன் சொல்லுகின்றபடி ஆடும் பதுமைகளாக இருப்பதே, அவர்களின் தலையாய கடமையாகும். பணத்தைப் பொறுத்த வரையில்தான் அவர்களுக்குப் பேச்சு! மானமிழந்த வாழ்வு!! வேறு எந்தவிதமான சம்பந்தமும் தொடர்பும், வேந்தனுக்கும் நண்பர்கள் என்பவர்களுக்கும் கிடையாது. அவனைப்பற்றி இவர்களுக்கு எப்படி ஒன்றும் தெரியாதோ, அதே நிலைதான் அவனுக்கும். அப்படித்தான் நட்பென்பது இவர்களுக்கிடையே நின்று அழுதுகொண்டிருந்தது. என்னவென்று இவர்கள் கொண்ட நட்பின் மகிமையை எடுத்து இயம்புவது? எவருக்குமே ஒரு இலட்சியம்—கொள்கை என்பது கிடையாது. மிருகமாக — மரக்கட்டைகளாக இருந்தார்கள். ஒரு பெரிய வேடிக்கையாகத்தான் இருக்கின்றது; சிரிப்புத்தான் வருகின்றது. இரும்புப் பெட்டியைக் காலி செய்துவிட்டு, எம். எல். ஏ. யாகி ஊட்டிக்கும் சென்னைக்கும் உல்லாசப் பயணம் நடத்திய வண்ணம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும், காங்கிரஸ் கட்சியின் தோழர்கள் இந்த இடத்திலே நம்முடைய ஞாபகத்திற்கு வருகின்ருர்கள்; தமிழைப் பழிக்கும் — தமிழ்நாடென்று பெயர் வைக்க மறுக்கும் — வானொலி என்று மாற்ற வெறுக்கும் அவமானச் சின்னங்கள், கட்டாயம் ஞாபகத்திற்கு வரத்தானே செய்வார்கள்.

அரசியலில் பகிரங்கமாகவே அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டார்கள். மந்திரி இடத்தைப் பிடிக்க இருவருக்குமே பலத்த போட்டி! ஒருவன் பெயர் **ஜியுகாசில்**. அவன் எதிரியின் பெயர் **விவியம்பிட்**. இரண்டுபேரையுமே விட்டிற்கு வெறுங்கையாக மூன்ரும் ஜியார்ஜ் துணிந்து அனுப்பிவிட்டான். அரசியல் வானிலே அவர்கள் இருவரும் சலிக்காமல் போட்டுக் கொண்டிருந்த ஆட்டத்திற்கு, மூடுவிழா நடத்தி மூச்சுவிடாமல் செய்துவிட்டான். இந்தச் சமயத்தில்தான் வேந்தனுக்கு ஒரு பக்கத் தலைவலி ஆரம்பமாகியது. அதாவது, ஜான்வில்க்ஸ் என்ற எழுத்தாளன், காலம் கனிந்து விட்டதென்று தெரிந்துகொண்டு, காவலனைப் பேனுவால் கடித்தான்; சொல்லால் சுடுகின்ற விளையாட்டைத் துணிச்சலாக ஆரம்பித்தான். அவன் தைரியத்தை பாராட்டத்தான் வேண்டும்!

அந்தப் பத்திரிகையின் பெயர் "நார்த் பிரிட்டன்" அதன் ஆசிரியர் ஜான்வில்க்ஸ். அரசனைத் தாக்குவதற்கென்றே ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை என்பது குறிப்பிடத் தக்கது, விளாசித் தள்ளினுன் வில்க்ஸ். அவன் கரத்தால் எழுதப்பட்ட கருத்துக்கள், மக்களின் சிந்தனையைக் கிளறிற்று. பொதுமக்கள் மிகவும் விரும்பி, போட்டி போட்டுக்கொண்டு பத்திரிகையை வாங்கிப் படித்தார்கள். ஒருவர் காசு கொடுத்துப் பத்திரிகையை வாங்கிவிட்டால், அதைச் சுற்றிப் பத்துப்பேர் வட்டம் போட்டுக்கொண்டு படித்துவிட்டு, நீட்டாகப் போய்விடுவதில்லை—இங்கு போல்! எல்லோருமே பத்திரிகையை வாங்கி ஆதரித்தார்கள். நாளடைவில் அது செல்வாக்கு மிக்க பத்திரிகையாயிற்று. அதன் ஆசிரியர் வில்க்ஸ் வளர்ந்துவிட்டார். வேந்தனுக்கு வயிற்று வலி ஆரம்பமாகிவிட்டது! விரோதியின் வளர்ச்சியைக் கண்டு வேதனை அடைந்தான். குற்றவாளியாக்கிச் சிறையிலே போட்டுக்கொல்ல, சட்டப்படி வழியொன்றைக் கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தான். மன்னர்களுக்கெல்லாம் இத்தகைய மார்க்கந்தானே உதயமாகும்! பெரும்பாலும் 'பெரிய மனிதர்கள்' என்பவர்களுக்கு நல்லவழி என்பதே தெரியாதே!!

"அமைச்சர்கள் என்போர் அகம்பாவம் பிடித்து அலைகின்ருர்கள். மக்களின் குரலுக்கு செவி சாய்ப்பதில்லை. மமதையாக இருக்கிருர்கள். அவர்களால் வாழ்கின்றவர்கள், அவர்களையே அவமதிக்கிருர்கள்; அலட்சியம் செய்கிருர்கள்; அவர்களின் மனம்போனபடியெல்லாம் ஆடிக்கொண்டு திரிகின்ருர்கள்; உருப்படியாக எதையும் செய்ய கையாலாகாதவர்கள். முதற்கண் இது பெருத்த அவமானமாகும். அழியும் நாள் எந்நாளோ?

நல்ல குணங்களுக்கு உறைவிடமாக மன்னர் என்பவர் இருக்க வேண்டுமென்பதை, நம் அரசர் மறக்கக் கூடாது. அவரைத் தாங்கிக்கொண்டிருக்கிறதே அரியணை, அது உண்மைக்கு இருப்பிடமாக இருக்கவேண்டும்; கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்காமல் இருக்க வேண்டும்; குற்றமற்ற யோக்கியதைக்கு எடுத்துக்காட்டாக இருத்தல் வேண்டும். இவற்றையெல்லாம் மன்னர் அறியவில்லைப் போலும்!

வெறுக்கத்தக்க உதவாக்கரைத் திட்டங்களைக் கொண்டு வருகின்ருர். நீதியற்ற விளம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிருர். இப்படியா நடந்துகொள்வது? யார்தான் வருந்தாமல் இருக்கமுடியும்? அவரின் பொய் வார்த்தைகளையெல்லாம், எல்லா அன்பர்களுமே நன்கு தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிருர்கள்.

சௌராஷ்டிராவில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட, **ஹிரான்** அணைக்கட்டு சரியான முறையில் அமைக்கப்படாததால், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த வேலை செய்யும் மக்களின் வரிப்பணம் ரூபாய் 70 லக்ஷம் பாழாகிறது.

இந்த ஹிரான் அணைக்கட்டிற்கு அடித்தளமே இல்லையாம், ஆகவே நீரோட்டத்தை தடுக்க முடியவில்லை, அணை இருந்தாலும், ஆற்றுநீர் நிலத்தின் ஒரு புறம் புகுந்து மறுபுறம் வந்து விடுகிறது.

இந்த அணைக்கட்டின் உபயோகமற்ற தன்மை இத்துடன் நின்றுவிடவில்லை. ஓடிவரும் ஆற்று நீரைத் தடுத்து நிறுத்துவதற்கு அணைக்கட்டு இருந்தாலும், அந்தத் தண்ணீரை வெளியேற்ற வடிகால்கள் கிடையாதாம். ஆகவே இந்த அணைக்கட்டில் நீர் இருந்தாலும் உபயோகப்படுத்த முடியாது.

இந்த அணைக்கட்டு 6465 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணிர்வசதி அளிக்க கட்டப்பட்டது. ஆனுல் இது **கிர் காட்டின்** மையத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அணைக்கட்டின் அருகில் பயிர் செய்யக்கூடிய நிலங்கள் எதுவும் இல்லை.

ஆகவே இந்த அணைக்கட்டிற்குச் செலவிடப்பட்ட பணம் **ரூபாய் எழுபது லட்சம்**, பாழாகிறது.

நாம் எவ்வளவோ பாடுபட்டு இருக்கிறோம். இரத்தம் சிந்தித்தான் அருமையான அநேக இடங்களைக் கைப்பற்றினோம். அதையெல்லாம் இப்போது திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்வது என்ன நியாயமாகும்? இது ஒரு பேச்சா? அந்த வெட்கங்கெட்ட செயலுக்கு, பார்லிமெண்டின் அங்கீகாரம் இருந்ததென்று ஜம்பமாகப் பெருமை அடித்துக் கொள்ளுகிறார்கள். எப்படிக்கிடைத்தது இந்த அங்கீகாரம்? யாருக்குத்தான் தெரியாது! கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையா? அதுவெல்லாம் வெட்ட வெளிச்சமான விடயமாகும்''

ஒரு முறை "நார்த் பிரிட்டனில்'' வந்த செய்திதான் இது. அரசரின் பேச்சை ஆவேசமாக வில்க்ஸ் தாக்கி எழுதியிருந்தார். கொற்றவன் கைக்கும் பத்திரிகை கிடைத்தது. அதற்கென்றே இருக்கும் கூலிகள் தட்டிக்கொடுத்தார்கள், அவன் வெகுண்டெழுந்தான்; வெறிபித்த வேங்கையானான். அப்பொழுதே **க்ரென்வில்லை** அழைத்தான். அந்த மண் பொம்மைதான் முதல் மந்திரி! அமைச்சன் ஓடி வந்து நின்றான்.

"வில்க்ஸ் இராசநிந்தனை செய்துவிட்டான்'' விஷயமறியாத சிறு பிள்ளை! விடக்கூடாது அவனை, ஒரு பொது ஆணையின் பேரில், விசாரணைக்கு உடனடியா ஏற்பாடு செய்க! அந்த அற்பன் தப்பிவிடாதபடி வேலி அமைக்க! சட்டத்தின் துணைகொண்டு, சண்டாளன் நழுவிவிடாதபடி ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்க!—காவலன் கர்ஜனை அடங்கியது. நல்ல நீதி கிடைக்குமா?

* * *

அவன் கையிலிருந்த பேனா சலிக்காமல் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. கோப்பையிலிருந்த தேனீரைக் குடிக்க மறந்துவிட்டான். அது மேசையின் மேல் ஆறிக் கிடந்தது. பேச வந்த செல்லக்கிளி, பேசி அவன் சிந்தனையைப் பாழாக்காமல், பின்னால் போய்ப் பதுமையாக நின்றாள்; பொறுத்துக்கொண்டாள். எழுதி முடித்ததுமே அவன் இருவிழிகளையும் தன் கரத்தால்மூடி, வேடிக்கை செய்ய வேண்டுமென்று காத்திருந்தாள்.

ஒரே மூச்சாக அவன் எழுதி முடித்துவிட்டான். பாழாக்கிய நேரத்திற்குச் சரியான பலன் கிடைக்காமல் வீணாகிப் போய்விடவில்லை. நன்றாகச் சிறுகதை அமைந்துவிட்டது. அவனுக்கு முழுத் திருப்தி, நெஞ்சிலே மகிழ்ச்சி பிறந்தது; முகத்திலே ஆனந்தம் திருநடனம் புரிந்தது. தலைவியின் நினைவு இப்போது வந்துவிட்டது. கதையை அவளுக்குப் படித்துக் காட்டவேண்டும் என்ற ஆசைபோலும்! தலைவன் கைகளை உதறிக்கொண்டே தலைவியை ஆவலுடன் அழைத்தான். பொங்கி வந்த சிரிப்பைப் பாவையவள் மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, பேசாமலேயே நின்றிருந்தாள்.

"இன்பமே! இங்கென்னைத் தனியாகவிட்டுவிட்டு, அங்கென்ன செய்துகொண்டிருக்கிறாய்?''

அவள் தன்னையுமறியாமல் வாய் திறந்தாள்; இருந்தாலும் பேசாமல் சமாளித்துக்கொண்டாள்.

"வாவென்று நான் அழைக்க, வாராமல் வேண்டுமென்றே நின்றென்னை ஏங்க வைக்கும் துன்பத்தை, என்னால் தாங்கமுடியவில்லையே கண்ணே!''

"இப்பொழுதாவது என் நினைவு அத்தானுக்கு வந்ததே! பின்னால் தவமிருக்கும் பேதையைப் பாராமல், கற்பனையில் மிதந்தால் நானென்ன செய்வது?''

"அன்பே! என் சிந்தனையைக் கலக்கக்கூடாதென்ற நல்லெண்ணமா?''

"பொன்னத்தான்! போங்களத்தான்! போட்டென்னைக் கொல்லும் இடர்தன்னை என்னென்பேன்! இனிமேல் போதும் உங்கள் சிறுகதை. எழுத ஆரம்பித்தால் என்னையே மறந்துவிடுகிறீர்கள். விளையாட வழியில்லாமல் இன்பவேதனைப் படுகிறேன் நான்!''

"வந்திங்கே நீண்ட நேரம் ஆகிவிட்டதா? உன் பஞ்சுப் பாதங்கள் நோகவில்லையா? கோபமா, செல்வமே!''

அவள் எதிரேயிருந்த ஆசனத்தில் உட்காரச் சென்றாள். அவன் இழுத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டான். கோப்பையிலிருந்த தேனீரை வாயருகே கொண்டு போனாள். இன்பமாகப் பருகினான். அவளைப் பருகியிருந்தால், சுவை குறித்து வேண்டுமென்றே கேலி செய்திருப்பான். அமுதினை ஊட்டும்போது ஆலகாலவிஷம்கூட, அமிர்தம் போன்றல்லவா இனிக்கும்!

"வெளியே போகலாம்; விருப்பமாக இருக்கிறது; எத்தனை நாள் அந்த இன்பம் கண்டு ஆகிவிட்டது?''

"யாரேனும் வந்தால் விலகி, இன்றேல் மிக நெருங்கி, தெருவிலே இராஜாவும் இராணியும் போல் தென்றல் நடைபோடத் திட்டமா?''

அத்தானின் வாயைப் பொன் கரத்தால் அவள் பொத்தினாள். ஆசையோடு அவன் உற்று நோக்கினான். அந்தப் பார்வை தரும் காதல் நோயைப் பொறுக்கமுடியாமல், அவனிரு கண்களுக்கும் அந்தி நேரச் சிவப்பாக இருக்கும் இதழ்களால், இன்பமுத்தங்களைப் பரிசாகத் தந்தாள். நடக்கவேண்டியதெல்லாம் நடந்து முடிந்தது. வெட்ட வெளியிலே புதிய உற்சாகம் பெற, அவன் வெளியே கிளம்பினான். எப்பொழுதுமே இப்படிஜோடியாக உலாவச் செல்வதென்றால், அவளுக்கு மிகவும் பிடிக்கும்! கண்டதையெல்லாம் வாங்கிக்கொடுக்கச் சொல்லவேண்டும் கண்ணாளரை என்று வேறு, இன்றவள் பெரிதாகத் திட்டம் போட்டுக் கொண்டிருந்தாள்.

அவர்கள் தெருவிற்குக்கூட வரவில்லை. அழகு மாளிகையின் வாயிற்படியிலே வந்து நின்றார்கள். அரசாங்க ஆட்கள் வந்துவிட்டார்கள். அவனை—ஜான் வில்க்ஸைப் பிடித்துக்கொண்டார்கள். அப்படியே கடிதங்களை எல்லாம் வாரி எடுத்துக்கொண்டார்கள்; இழுத்துக்கொண்டு போனார்கள். இந்த

மத்திய அமைச்சர், எஸ். கே. டே. வட்டாரஅபிவிருத்தி ஆராய்ச்சிக் கலைக்கூட்டத்தில் முடிவுரை வழங்கியபோது, வெளிப்படையாகப் பின்வருமாறு கூறியுள்ளார்:

"இந்த வட்டார அபிவிருத்தி திட்டங்களை, பணக்காரர்களும், வட்டாரங்களில் நல்ல செல்வாக்கு உள்ள நபர்களுமே பயன்படுத்துகிறார்கள் என்று அண்மையில் எடுக்கப்பட்ட குறிப்புரைகள் எடுத்துக் காட்டுகின்றன."

அக்கிரமத்தை, ஆணவத்தின் சிகரம்—சர்வாதிகாரத்தின் கொடுமை என்று கண்டிக்க எவரும் தயங்க மாட்டார்கள். இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஓர் நாள், இத் துயர் வாராது போகாது என்று அவள் நன்கறிந்திருந்தாள், என்றாலும் இந்த அதிர்ச்சியை, அவளால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. பிணமாகப் பஞ்சணையில் போய் விழுந்தாள். சிறு குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதாள்.

அவன் அனுவசியமாக நடை போட்டான். சிங்க நடை எனலாம். நடக்கப்போவதை நினைந்து வில்க்ஸ் வருந்தவில்லை. நீதி மன்றத்திலே கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். மக்கள் கூட்டமே அங்கு திரண்டிருந்தது. ஆர்வத்துடன் தீர்ப்பைக் கேட்கக் குழுமியிருந்தார்கள். எல்லோருமே அவன் முகத்தைக் கவனித்தார்கள். நீதிபதிகூடக் கவனித்தார். எவரையுமே அவன் கவனித்ததாகத் தெரியவில்லை. சிந்தித்துக் கொண்டிருந்தான். சிறையிலே போட்டு வைத்தால், அவன் இலட்சியம்—கொள்கை செத்தா போய் விடும்? வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெடித்தன.

“நான் குற்றவாளியாக நிற்கிறேன்; நிறுத்தப்பட்டு இருக்கிறேன். இது சதியின் திருவிளையாடல்! சட்டப்படி நான் விடுவிக்கப்படவேண்டியவன் என்பதைச் சொல்லிக் கொள்ளுகின்றேன். என்னைப்பற்றி உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இந்தச் சின்ன விஷயம்கூடத் தெரியாமல்தான் தவறு நடந்திருக்கிறது. நான் ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினன் என்பதை, இந்த இடத்தில் ஞாபகத்திற்குக் கொண்டு வருகின்றேன். எந்த விதியின்படி என்னைப் பிடித்தார்கள்? நல்லறிஞர்கள் இதை எதிர்ப்பார்கள். நாடே எதிர்க்கும்; கண்டிக்கும். அப்படி இருக்கும் போது என்னையும், ஒன்றுமறியாத என் தோழர்களையும், இப்படி அவமானப்படுத்தியது என்ன நியாயமாகும்? சட்ட விரோதமான காரியத்தைத் துணிந்து செய்திருக்கிறார்கள் என்பதை, யாரே மறுக்க முடியும்?

சட்டத்தைக் காட்டிச் சாடினான். சட்ட விரோதமான பொது ஆணையைப் பிட்டுப் பிட்டுச் சொன்னான். சாடையாக அங்கத்தினர் பதவியையும் சுட்டிக் காட்டினான், அவன் முழங்கியதில் தவறொன்றும் இல்லை. உண்மையையே உணரச் செய்தான். எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள், எவராலும் மறுக்க முடியாத சக்தி வாய்ந்தவையாகும். நீதிமன்றம் நல்ல தீர்ப்பு வழங்கியது. அவன் வெற்றி அடைந்தான். மக்களின் கரகோஷம் வானை முட்டியது. மகிழ்ச்சி பிறக்கத்தானே செய்யும்! உண்மை வென்றது. அநீதி ஒழிந்தது. பணம் பேசவில்லை!

வழக்கு மன்றம் உண்மைக்குத் தலை வணங்கவேண்டும். ஆளைக் கண்டு நீதிபதிகள் மயங்கக் கூடாது. அது, வேலியே பயிரை மேய்வதாகும். அந்த நெறியிலே நின்று தீர்ப்பு வழங்கியதால்தான், ஜான் வில்க்ஸ் தப்பினான். ஆயினும் நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசர் அவமதிப்பார்போல் தோன்றியது. பார்லிமெண்ட்கலைந்ததுமே மீண்டும், வில்க்ஸ் பிடிக்கப்படலாம் என்ற பேச்சு அடிபட்டது. அதனாலே வில்க்ஸ் வருத்தத்துடன், பிரிட்டனை விட்டே யாருக்கும் தெரியாமல் வெளியேறிவிட்டார். பெற்றவர்கள் அழுதார்கள். சுற்றத்தார் வருந்தினார்கள். நண்பர்கள் செய்வதறியாது கைகளைப் பிசைந்து கொண்டார்கள். ஒரு கணமும் பிரிந்தறியாத் தலைவி, கோவெனக் கதறினாள்; கண்ணீர் வடித்தாள். உடல் மெலிந்தது; அழகு ஆபாசமாகியது; அனைத்துமே அழிந்தது.

ஆண்டுகள் பல உருண்டன. எங்கெங்கோ அவன் அலைந்து கொண்டிருந்தான் — பிறந்த தாயகத்தைப் பிரிந்து அலையும் சோகம் அவனை வாட்டியது. பகைமையை இன்னுமா பாராளும் வேந்தன் நினைவில் வைத்துக்கொண்டிருப்பான்? அது பழைய கதையாகிப் போய்விட்டிருக்கும். அவன் நினைத்தான். தாய்நாட்டிற்குப் பேராவலுடன் வீல்க்ஸ் திரும்பி வந்தான். ஜியார்ஜா இவ்வளவு எளிதிலே மறந்துவிடுவான்? அவன் எண்ணத்தில் மண் விழும் சம்பவம் சீக்கிரமே நடந்தது. பாம்பை நம்பினாலும் நம்பலாம்; பாராளும் வேந்தனையா நம்பமுடியும்?

பணம் பேசுகின்ற தேர்தல் காலம் வந்தது. நாவலர்களையும், புலவர்களையும் நல்ல கவிஞர்களையும், இந்த நன்றிகெட்ட தேர்தல் செல்லாக் காசாக்கும். நல்லதே செய்யத் தெரியாமல், பணத்தை மட்டுமே நம்பி வாழும் அப்பாவிகளை, வர்வென்றழைத்து வெற்றி விழா நடத்தும். என்றாலும் நடுத்தர வகுப்பினர் சார்பில் வில்க்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். வெற்றி மங்கை மலர்மாலை சூட்டி மரியாதை செய்தாள். என்ன முயன்றும் மன்னரும் மற்றவர்களும் கரிபூசிக் கொண்டார்கள். அரசர் கிராப்டனை அழைத்தார். அந்த அமைச்சனைக் கொண்டு, அத்தேர்தலினைச் சட்டப்படி அங்கீகரிக்க முடியாதென்று கூறும்படி கட்டளையிட்டார். என்ன குறை கண்டார்களோ! மக்கள் ஆத்திரப்பட்டார்கள்; மிகுந்த பரபரப்பு அடைந்தார்கள். புதுத் தேர்தல் நடந்தது. இரண்டாவது முறையாக நடந்த தேர்தலிலும், மன்னருக்குச் சரியான பாடத்தை மக்கள் கற்பித்தார்கள். அப்போதும் தமக்கிருக்கும் பழிவாங்கும் கெட்ட மனப்பான்மையை, மன்னன் காட்டிக் கொள்ளத் தவறவில்லை. மூன்றாவது முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த முறை நடந்த ஒரு வேடிக்கை விநோதம் என்னவென்றால், மூவாயிரம் ஓட்டுக்கள் பெற்ற வில்க்ஸ் தோற்றுவிட்டாரென்றும், முந்நூறு ஓட்டுக்களே பெறமுடிந்த எதிரி சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது! கேவலமான ஒரு செயல்! எத்தனை முறை தேர்தல் நடத்தினாலும், எதிரிதான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்ற சாதாரண உண்மை தெரியாமல், ஏனோ வீணாகத்தம்முடைய அரசியல்தெளிவின்மையை மன்னர் காட்டிக் கொண்டிருக்கிறார்! பணத்தின் ஆடல் பலிக்கவில்லை! சட்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டார்கள் சதிகாரர்கள். அதனாலென்ன முழுகிப் போய்விடும்? ஓரிடத்தின் பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பவர்கள் மக்கள்தான். எப்படியும் காமன்ஸ் சபையாராக இருக்கமுடியாது! இப்படியொரு கேள்வியைப் பார்லிமெண்டில் அங்கத்தினர் கிளப்பி, குத்திக்காட்டி அவமானப் படுத்தினார்கள்.

சிறையிலே வில்க்ஸ் தள்ளப்பட்டார். மன்னருக்கிருந்த சின்னப் புத்தியையே இது வெட்ட வெளிச்சமாகக் காட்டுகிறது. கொடுமையிலும் பெரியதொரு கொடுமையாகும். அரசனுக்கிருந்த பழிக்குப் பழி வாங்கும் பகைமை நிறைவேறியது. ஆயினும் இதுவும் ஒரு

(12-ம் பக்கம் பார்க்க)

மூன்று நிலை-மூன்றுங் கடந்த நிலை!

பலத்த இருட்டடிப்புச் செய்வதையே தங்கள் பரம்பரைத் தொழிலாகக் கொண்ட சில பத்திரிகைகள் கூட தி. மு. க-வின் தேர்தல் வெற்றி குறித்து தெளிவான சேதிகளைத் தந்தன, தலையங்கங்கள் தீட்டின, கட்டுரைகள் எழுதின. நகராட்சி நிர்வாகம் போன்ற பொது அமைப்புகளில் கட்சி அரசியல் தேவையில்லை என்று "கல்கி" ஏடு எழுதுகிற அளவுக்கு தி. மு. க-வின் தேர்தல் வெற்றி அதன் கண்ணை உறுத்தியிருக்கிறது. ஆனால் கேலிச் சித்திரங்கள் போடுவதையே தன் வாடிக்கை வியாபாரமாகக் கொண்டவர்கள் இன்னின்ன காரணங்களால் தி. மு. க. வெற்றி பெற்றுவிட்டது என்று சொல்வதன் மூலம் தங்கள் மன அரிப்பைச் சொரிந்து கொடுத்துக்கொண்டார்களே தவிர, காங்கிரஸ் ஸ்தாபனத்திடத்தும் — சர்க்காரிடத்தும் தமக்குள்ள விசுவாச புத்தியை காட்டிக் கொண்டார்களே தவிர, என்னென்ன காரணங்களால் காங்கிரஸ் தோற்றது என்று கண்டு பிடித்துச் சொல்லவில்லை. அந்த அளவுக்கு இந்த மாநிலத்தில் காங்கிரஸின் தோல்வி எல்லோராலும் எதிர்பார்த்த ஒன்றாக — ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாக ஆகிவிட்டது.

காங்கிரசின் தோல்வியைவிட தி. மு. க-வின் வெற்றி பலருக்கு வேதனையைத் தந்திருக்கிறது. விலாவிலே வேலெடுத்துப் பாய்ச்சியிருக்கிறது. இந்த வேதனைக்குச் சொந்தக்காரர்கள், துக்கத்துக்கும் வெட்கத்துக்கும் பாதிக்கப்பட்டவர்கள் தூரப்போய்விட்டார்கள். ஆனால் தொடர்பே அற்றவர்— அறுத்துக்கொண்டவர் விட்டேனாபார் என்று வெளியே வருகிறார்— வீராவேசமாகப் பேசுகிறார்.

தி. மு. க-வின் வெற்றி இந்தியாவின் ஒருமைக்குச் சவால் என்கிறார். சென்னையில் ஜெயித்தால் போதுமா? காஞ்சியில் ஜெயித்தார்களா என்கிறார். ஜுரவேகத்தில் இன்னும் ஏதேதோ உளறுகிறார், ஒருவர். "தி. மு. க-வின் தேர்தல் வெற்றி குறித்து 75-நிமிஷ விமர்சனம்" என்று நாலு காலம் தலைப்புக் கொடுத்துப் பிரசுரிக்கிறது தமிழ்ப் பத்திரிகை ஒன்று.

இந்த மேதை சொல்கிறார் சென்னையில் கழகத் தோழர்கள் பெற்ற வெற்றி தி. மு. க. பெற்ற ஒருமித்த வெற்றியல்லவாம். காரணம் கழக அபேட்சகர்கள் யாரும் எந்த மேடையிலும் நாட்டுப் பிரிவினையை வற்புறுத்தவில்லையாம். திராவிடநாடு கோரிக்கையைச் சொல்லி ஓட்டுக் கேட்கவில்லையாம். இன்னும் சென்ற பொதுத் தேர்தலில் பன்னிரண்டாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற காஞ்சியில் தி. மு. க. பெரும்பான்மை வெற்றி பெறவில்லை. இதிலிருந்தே தெரிகிறதல்லவா தி. மு. க-வுக்கு மக்களுடைய அபிமானம் இல்லை என்பது என்று வேறு பேசியிருக்கிறார். பாவம் திருடப்போய்த் தலையாரி வீட்டில் ஒளிகிறார்.

மான்

இவரின் இந்தத் தேர்தல் விமரிசனம் எவ்வளவுதூரம் முன்னுக்குப் பின் முரணானது என்பதைப் பார்ப்பதைவிடத் திராவிட முன்னேற்றக் கழகம் நகராட்சி மன்றத் தேர்தல்களில் ஈடுபட வேண்டிய இன்றியமையாமை எப்படி ஏற்பட்டது என்பதைப் பார்ப்போம்!

நகராட்சி— ஊராட்சி போன்ற பொதுப்பணிகளில் கட்சி அரசியல் வளருவதை ஆரம்பமுதல் எதிர்த்து வந்த ஒரே இயக்கம் தி. மு. க-தான். ஆனால் கோபியில் கூடிய காங்கிரஸ், நகராட்சிமன்றத் தேர்தலில் ஈடுபடுவது என்று தீர்மானமே போட்டது. எனவே, நகராட்சிமன்றப் பொதுப்பணிகளில் ஒரு கட்சி ஆதிக்கம் வலுப்பெறுவதைத் தடுத்து நிறுத்தவே தி. மு. க-வும் தேர்தல் களத்தில் இறங்கிற்று. இது சராசரி அரசியல் அறிவு பெற்றவர்களுக்குக் கூடப் புரியக்கூடிய ஒன்று. ஆனால், இதையே புரிந்துகொள்ள முடியாத மேதை தி. மு. க. திராவிடநாட்டுப் பிரச்னையை வலியுறுத்தி ஓட்டுக் கேட்கவில்லையே என்கிறார். தி. மு. க, தேர்தலுக்கு நிற்கிறது என்றாலே, அது திராவிடநாட்டுப் பிரச்னையை வலியுறுத்தாமல், ஏக இந்தியா பிரச்னைக்கா ஓட்டுக் கேட்கும்? அதுதான் போகட்டும்; நகராட்சி நிர்வாகத்துக்கும் நாட்டுப் பிரிவினைக்கும் என்ன சம்மந்தம்? இதையும் விட்டு விடுவோம், நாட்டுப்பிரிவினையை வலியுறுத்தவில்லையே என்ற அவரின் கூற்றை வாதத்துக்காக ஒப்புக்கொள்வோம்! இப்படி நாட்டுப் பிரிவினையைச் சொல்லி ஓட்டுக் கேட்காதவர்கள் பெரும்பான்மையினராக வந்த சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் முடிவு மட்டும் இந்தியாவின் ஒருமைக்குச் சவால் என்று இந்த மேதை எப்படிச் சொல்கிறார்?

இவர் இப்போது கிளம்பியிருக்கிறார். ஆனால் இவருக்கு முன்னே

"சிறு பிள்ளைகள்
கூத்தாடிகள்
இவர்களுக்கென்ன தெரியும்?
எழுதுவார்கள், பேசுவார்கள்,
இவர்களை மக்கள் எங்கே
மதிக்கப் போகிறார்கள்"

என்றுதான் அரும்பு நிலையில் இருந்த தி. மு. க-வைப்பற்றிஎழுதினார்கள்—பேசினார்கள், கோலேந்திகளும் அவர்தம் கொடிபிடிப்போரும். தி. மு. க—அந்த அமைப்பையே அலட்சியப்படுத்துவதன் மூலம், அற்பமானது என்று ஒதுக்கித் தள்ளுவதன் மூலமே தங்கள் பலம் பெருகிவிடும், வளர்ந்துவிடும் என்று நினைத்தார்கள். இவர்கள் எண்ணத்திலெல்லாம் மண்ணள்ளித் தூவுகிற வகையில் தி. மு. க. வளர்கிறது, வலுவடைகிறது.

அலட்சியப் படுத்துவதன் மூலமே தி. மு. க-வை மக்கள் மனத்திலிருந்து ஒதுக்கிவிடலாம் என்று கனவு கண்டவர் நெஞ்சி

லெல்லாம் புதிய அச்சம் வந்து புகுந்துகொண்டது. எனவேபழைய இராகத்திலேயே புதிய பல்லவியைப் பாடினார்கள்.

"நாடகமாடிகளுக்கு நாடாளத் தெரியுமா? மக்கள் செல்வாக்கு இவர்களுக்கு இருக்கிறது என்றால், தேர்தலில் நின்று பார்க்கட்டுமே? இவர்களுக்குக் கூட்டம் சேரும், ஓட்டுக் கிடைக்குமா"

என்று கூடக் கேட்டார்கள். இந்தச் சவாலை அல்ல, அல்ல; அழைப்பை தி. மு. க. ஏற்றுக் கொண்டது. பொதுத் தேர்தலில் ஈடுபடுவது என்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவெடுத்தது. இந்த மண்ணுக்கு விடுதலையும், அதன் மக்களுக்கு நல்வாழ்வும் தேவை எனப் பாடுபடும் ஆயிரமாயிரம் இதயங்கள் திருச்சி மாநாட்டிலே கூடி எடுத்த முடிவு அது. அந்த முடிவின் பின்னே நிற்கும் மகத்தான மக்கள் சக்தியை நினைக்க மறுப்பவர்கள் பழையபடியும் தங்கள் அலட்சிய மனோபாவத்திலேயே பேச ஆரம்பித்தார்கள்.

"இவர்கள் எங்கே ஜெயிக்கப் போகிறார்கள். ஒன்றிரண்டு பேர் வந்தாலே அதிகம். பாக்கி அத்தனைபேரும் 'டெபாசிட்' பறிகொடுத்துவிட்டுக் கையைப் பிசைந்துகொண்டு நிற்கப்போகிறார்கள்" என்றார்கள். பாவம் அதிலும் ஏமாந்தார்கள். வெற்றி வீரர்களாக பதினைந்துபேர் சென்னை சட்டமன்றத்திலே பெருமிதத்தோடு வீற்றிருக்கிற காட்சியைக் கண்டார்கள். காந்தி படத்தின் முன்னே இவர்கள் கையைப் பிசைந்துகொண்டு நிற்கிற காட்சியை நாடு கண்டது.

ஏற்பட்ட அவமானம் ஆத்திரமாக மாறியது. எனவே வசை புராணம் பாடுவதில் இறங்கினர். திராவிட முன்னேற்றக் கழகத்தை "பிச்சைக்காரர்கள்" என்றார்கள். "பைத்தியக்காரர்களை, ஜாலவித்தைக்காரர்களைச் சுற்றிக் கூட்டம் சேர்வதுபோல், மக்கள், இவர்கள் பின்னே திரள்கிறார்கள். கொள்கை ஏது? குறிக்கோள் ஏது? இவர்கள் பிச்சைக்காரர்கள்" என்றார்கள்.

ஒரு அரசியல் இயக்கத்தை, மக்கள் நெஞ்சில் நாளும் வளர்ந்து வருகிற ஒரு விடுதலைப் படை வரிசையை, பைத்தியக்காரர்கள், காட்டு மிராண்டிகள், பிச்சைக்காரர்கள் என்று சொல்கிற பொறுப்பற்ற தன்மையை-அரசியல் அநாகரிகத்தை இங்கேதான் கண்டோம். ஆனால் இவ்வளவு ஏசலையும், பூசலையும் தாங்கிக்கொண்டு கண்ணியம் குலையாமல், கட்டுப்பாடு மாறாமல், கடமையாற்றிக் கொண்டிருக்கும் விடுதலைப் படை வரிசை தி. மு. க-வைத் தவிர வேறெதையும் வரலாறு காணவில்லை. தி. மு. க—திட்டத் திட்டத் வளர்ந்தது, வெட்டவெட்டத் துளிர்த்தது, அடிக்க அடிக்க வலுத்தது, சுடச் சுடச் சொக்கத் தங்கமே ஆயிற்று.

அலட்சியப் படுத்தியே திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்துவிட நினைத்தார்கள்—ஏமாந்தார்கள்! தி. மு. க வளர்ந்தது. இது ஒரு கட்டம்.

அடக்கு முறைகளால் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக் கட்டிவிடலாம் என்று பார்த்தார்கள்—அதிலும் ஏமாற்றத்தையே எதிர் கொண்டழைத்தார்கள்! தி. மு. க. புதிய வலுப்பெற்றது. இது இரண்டாவது நிலை.

இழித்தும் பழித்தும் பேசி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைக் கெடுத்துவிடலாம் என்று பார்த்தர்கள்—ஏமாந்தே போனார்கள்! கழகம் வெற்றி பெற்றது. இது மூன்றாவது நிலை.

திராவிட முன்னேற்றக் கழகம், இந்த மூன்று நிலைகளையும் தாண்டி முழு வெற்றியோடு நிற்கிறது. யாரும் அதை இனி வீழ்த்த முடியாத வண்ணம் விநாடிக்கு விநாடி வளர்ந்து வருகிறது. உதயத்தின் புதிய ஒளி எங்கும் பரவுகிறது. தி, மு. க அதன் தலைவாயிலில் நிற்கிறது. உலகம் விழிப்புறுகிறது—புதிய உருக்கொள்கிறது. துன்ப இருட்டையும், துயரப்பனிப் படலத்தையும் தொலைதூர இடைவெளியையும் தாண்டி வந்திருக்கிற எழு ஞாயிற்றின் புதிய ஒளியை இனி எவர் தடுத்து நிறுத்த முடியும்?

✻

10-ம் பக்கத் தொடர்ச்சி

நன்மையாகவே முடிந்தது. மேலும் ஒருபடி வில்க்ஸின் புகழ் மக்களிடையே உயர்ந்தது. அவர் ஜியார்ஜின் சிறையிலேதான் அடைபட்டுக் கிடந்தார். ஆனாலும் இலண்டன் மாநகரத்து முதியோர் சார்பில் வெற்றிகரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது மன்னனின் மண்டையிலே அடித்த சரியான அடி! சிறைச்சாலை வாசம் முடிந்தது. சிரித்த முகத்துடன் வில்க்ஸ் வெளியே வந்தார். காத்திருந்த கடல் போன்ற மக்கள் கூட்டம், அவரை வாரி எடுத்துக் கொண்டது. வெற்றி ஊர்வலம் நடத்தினார்கள். பெரியதொரு விழாப்போல் கொண்டாடினார்கள்.

வேதனையின் எல்லைக்கே வேந்தன் போய்விட்டான். உயிரோடு சமாதிகட்டவேண்டும்; தீவளர்த்து அதிலே வில்க்ஸைத் தூக்கிப் போட்டுக் கொல்லவேண்டும், என்ற ஆசை அரசனுக்கிருந்தது. எப்படி அதைச் செய்யமுடியும்? கொட்டினால், மக்கள் அவன் கொடுக்கையல்லவா வெட்டி எடுத்துவிடுவார்கள்! சோற்றாலடைத்த பிண்டம்போல் சும்மா கிடந்தான். நன்றாக அவன் வேதனைப்பட்டுச் சாகட்டும்! வேறு எப்படி நாம் அவனை வாழ்த்த முடியும்!

எல்லா வசதியும் வேந்தனுக்கு இருந்தது. ஆனால், மக்கள் மட்டும் அவன் பக்கம் இல்லை. எந்த வசதியும் அவனுக்கு இல்லை. ஆனால் மக்கள் சக்தி வில்க்ஸின் பக்கமிருந்தது. எனவேதான் காவலன் தோல்வி அடைந்தான். வில்க்ஸ் வாகையை மிகவும் எளிதாக அடைந்தான்.

* * *

அப்படியே, நடந்து முடிந்த சென்னை கார்ப்பரேஷன் தேர்தலையும் ஞாபகத்திற்குச் சிறிதுகொண்டு வாருங்கள். கனம் காமராசர் மொழிப்படி, பிச்சைக்காரர்களுக்கும் பிரபுக்களுக்கும் போட்டி! எல்லா வசதியும் காங்கிரஸ் கட்சிக்கு இருந்தது. என்ன வசதி மாட்டுக்காரர்களுக்கு இல்லை? நன்றாக அவர்களின் லீலா விநோதங்களைத் தெரிந்துகொண்ட சென்னை வாழ் மக்கள் மட்டும், அவர்கள் பக்கம் இல்லை. எனவேதான் தேர்தலிலே பல்டி அடித்துவிட்டார்கள். எந்த வசதியும் நம் கழகத்திற்கு இல்லை. என்றாலும் மிகப்பெரிய மக்கள் சக்தி நமக்கிருந்தது. ஆகவேதான் பிச்சைக்காரர்களாகிய நாம், பிரபுக்களாகிய காங்கிர்ஸ் கட்சிக்காரர்களை, முக்காடு போட்டு மூலையிலே உட்கார வைத்து, நல்லதொரு பாடத்தைக் கற்பித்தோம்.

நாடே 'சென்னை'யாக மாற நீண்ட நாட்கள் இல்லை; நாம் வளமார் திராவிடத்தை அடையும் நாளும், அண்மையில்தான் இருக்கின்றது. எனவே, ஆர்வத்துடன் எல்லோரும் உழைப்போமாக! ✻

4

திருமணத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்தன. ஊர்க் கல்யாண மண்டபம் வாடகைக்கு எடுக்கப்பட்டது. மேளகாரர் முதற்கொண்டு பதார்த்தக் கடைக்காரர் வரை பேசப்பட்டு முன் பணமும் தரப்பட்டுவிட்டது. முகூர்த்தச் சேலையும் வாங்கிவிட்டார்கள். தாலி செய்தாகிவிட்டது. பட்டாடை வாங்கியாகிவிட்டது. பட்சண வகைகள் தயாரிக்கப்பட்டு விட்டன, முகூர்த்தக்காலும் நட்டாகிவிட்டது. பத்திரிகைகளை அனுப்பிவிட்டனர். சென்னைக்குச் சென்ற முருகேசபிள்ளையும் திரும்பிவிட்டார். முகூர்த்தத்திற்கு முன்னாள் மாப்பிள்ளை வருவாரென்றும், திருமணம் முடிந்த மறுநாளே அமெரிக்கா பயணம் ஆவாரென்றும் சம்மந்தியாரிடம் கூறினார். எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. பணம் இருந்தால் கேட்க வேண்டுமா?

மங்களம் குணமடையாத காரணத்தால் அவள் அருகிலேயே இருந்து வந்த கண்ணன் தன் தாயின் உடல் நிலையைக் குறித்துத் தன் தங்கைக்குத் தெரிவித்தான். கண்ணம்மா இரண்டு நாள் விடுமுறை வாங்கிக்கொண்டு சென்னையை விட்டுப் புறப்பட்டாள். அவள் புறப்பட்ட அதே வண்டியில் புறப்பட முத்துவும் புகைவண்டி நிலையம் வந்தான். எதிர்பாராத விதமாகக் கண்ணம்மாவைச் சந்தித்தான். காரணம் அறிந்தான். கவலையைத் தெரிவித்தான். ஆனால் தன் கல்யாணம் பற்றி அவளிடம் சொல்ல அவனால் முடியவில்லை, காரணமும் அவனுக்குப் புரியவில்லை. அவனையும் அறியாமல் ஓர் சங்கடம், அவனை ஊமையாக்கியது. கண்ணம்மாவோடு ஒரே பெட்டியில் பிரயாணம் செய்ய அவன் உள்ளம் தூண்டியது. அவள் உள்ளத்திலும் அத்தகைய ஆசை நிழல் உருவில் நடமாடியது. ஆயினும் இருவருக்குமே அந்த எண்ணம் துணிவைத் தரவில்லை!!

தாயைக்கண்ட கண்ணம்மாள் கலங்கிப்போனாள். சென்னைக்கு அழைத்துப்போய்த், தான்பயிலும் மருத்துவ மனையில் சேர்த்துக் கவனிப்பதாகக் கூறினாள்.

தங்கையின் யோசனையை ஏற்றுத் தன் தாயைச் சென்னைக்குஅனுப்பத் தீர்மானிக்கவேண்டி வந்தது. அவளோடு அனுப்பினால் எல்லாவித வசதிகளும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அன்றிரவே சென்னை வண்டிக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்தான். கடன் வாங்கினான். தேவையான சில பொருள்களை மூட்டைகட்ட முனைந்தான். அதற்குள் அவனது நண்பன் முத்து "கண்ணா" என்று கூப்பிட்டவாறே உள்ளே நுழைந்தான். வந்தவன் நேராக மங்களத்தைக் கண்டான். கவலையோடு விசாரித்தான். சென்னை செல்வதுதான் சிறந்ததென்று அவனும் ஆலோசனை கூறினான். பிறகு முத்து மங்களத்திடம் தனக்குத் திருமணம் ஏற்பாடாகியுள்ளதைச் சொல்ல அவள் மகிழ்வைத் தெரிவித்தாள். அது கேட்ட கண்ணம்மா நெருப்பை மிதித்தவள்போல் துடித்தவாறே உள்ளே போய்விட்டாள். முத்து தன் திருமணப் பத்திரிகை ஒன்றைக் கண்ணனிடம் நீட்டினான். வாஞ்சனையோடு வாங்கிய அவன் கண்கள் மணப்பெண் பெயரைப் படித்ததும் விழிகளில் அம்பு தைத்தாற்போல் துடித்தான். பூகம்பத்தில் அகப்பட்ட அட்டை வீடாயிற்று. அவன் கட்டியிருந்த காதற் கோட்டைகள்! அடிபட்ட கண்ணாடியாயிற்று: அவன் ஆசைக் கனவுகள்! கற்பனையால் ஊற்றெடுத்த இன்ப நினைவுகள் வெடிகுண்டுக்கு இலக்கான மாளிகையாயிற்று!

கண்ணன் மனநிலை அறியாத முத்து திகைத்தான். அடித்து வைத்த சிலைபோல் அசையாது நிற்கும் தன் நண்பனைக்கண்டு என்ன செய்வதென்று புரியவில்லை.

"கண்ணா என்ன இதெல்லாம். ஒன்றுமே புரியவில்லையே" என்றான். ஆயினும் அந்தச் சிலை அசையவில்லை.

"கண்ணா! காரணம் என்ன? சொல்! ஏன் இப்படி வெறிபிடிச்சாப்போல் நிற்கிறே! சொல்... சொல்" என்று கூறியவாறே உலுக்கினான் அவனைப் பிடித்து.

"முத்து" என்று அலறியவாறே அவன் தோள்மீது சாய்ந்தான் கண்ணன். சிறு குழந்தைபோல் கதறி அழுதான். முத்துவுக்கு ஏதும் புரியவில்லை. இந்த விபரீதமான நிலையைக் கண்ட மங்களம் தன் படுக்கையை விட்டு எழுந்து தன் மகன் கையைப் பிடித்து இழுத்து "கண்ணா! கல்யாணம் என்று சொல்லவந்தவனைக் கட்டிப் பிடிச்சு அழறதுதான் அழகா? ஏண்டா அழறே! உனக்கும் கல்யாணம் நடக்காதா? அடுத்த மாதத்திலே நல்ல பெண்ணாகப் பார்த்து நான் செய்துவைக்கிறேன்" என்று ஆறுதல்மொழி சொல்ல ஆரம்பித்தாள் தாய். கண்ணன் நிலைமையைப் புரிந்துகொண்டான் என்றாலும், கண்ணீரையோ கதறலையோ

அடக்கும் சக்தி அவனுக்கு இல்லாமற் போய்விட்டது. உடைப்பு எடுத்த மடையை அடைப்பதென்ன அவ்வளவு எளிதா?

கண்ணன் திடீரென்று ஊமையானான். அவன் உதடுகள் ஏதோ முணகுவதை முத்து கவனித்தான். சுற்றி சுற்றிப் பார்த்தான் கண்ணன்... இல்லை, வீடே சுற்றுவது போல் தோன்றிற்று அவனுக்கு. முத்துவுக்கு ஏதும் புரியவில்லை. இதை அறிந்த கண்ணம்மாள் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஓடிவந்தாள். தன் அண்ணன் நிலை கண்டாள். தன் தங்கை வந்து நிற்பதை உணர்ந்த கண்ணன் "கண்ணம்மா, பூங்கோதைக்கும் முத்துவுக்கும் திருமணமாம்" என்று சொல்லியவாறே கதறினான். "என்ன?" என்று கேட்ட கண்ணம்மாவும் சிலையானாள்! இதைக்கண்ட முத்துவிற்கு என்ன செய்வதென்று ஒன்றுமே தோன்றவில்லை. மங்களத்தைப்பார்த்தான். அவள் ஊமையாகக் கிடந்தாள். சிறிது நேரமல்ல, ஏறத்தாழ இரண்டுமணிநேரம் அந்த வீட்டில் சுடுகாட்டு அமைதி நிலவியது.

முத்து மெள்ள நடந்து நாற்காலியில் உட்கார்ந்தான். மேசைமீது கிடந்த புத்தகத்தைப் பிரித்தான். கடிதங்கள் சில கீழே விழுந்தன. அதில் ஒன்று "பூங்கோதை" என்ற எழுத்தைக் காட்டியது. அவன் அவைகளை எடுத்தான். ஒன்றைப் படித்தான். புரிந்து கொண்டான் நிலைமையை. அவன் மூளையே குழம்பியது. விடிந்தால் திருமணம்; மணப்பெண்ணோ நண்பனின் காதலி!!

எரிமலை வாரி இறைக்கும் கொதிக்கும் கந்தகக்குழம்பு இன்பக் கனவு காண்பவன்மீது வீழ்ந்தாலும் முத்து கொண்ட அதிர்ச்சி கொள்ள முடியாது! குருதியெல்லாம் திடீரென்று கொதிப்பேறி வேகமாகச் சுற்ற ஆரம்பித்தாற்போல் ஒரு உணர்ச்சி அவனை உலுக்கியது. மின்னலினும் வலிய சக்தி அவன் உடலில் பாய்ந்தது. உருக்கிய இரும்புக் குழம்பில் வீழ்ந்தவன்போல் துடித்தான். கண்களைத் திறந்துதான் இருந்தான். ஆயினும் அவனால் எதையும் காண இயலவில்லை! வெறி பிடித்தாற்போல்காட்சியளித்தான். மீண்டும் அந்த வீட்டில் அமைதி நிலவியது.

நகராச் சிலையாக நால்வரும் நின்றிருந்தனர் நெடுநேரம்! 'நண்பனுக்குத் துரோகம் செய்வதா?... இல்லை ...தோழனின் ஆசைக் கனவுகளைக் கலைத்து நான் மகிழ்வதா......முடியாது......அழைப்பிதழ்கள் போய் உறவினர்களும் வந்துவிட்டனர்... அதற்காக இந்த அநியாயம் புரிவதா?....அதோ மணப்பெண்ணை அழைக்கும் மேளவாத்தியம் கேட்கிறதே...அதோ சென்னை செல்ல வந்து நிற்கும் இரயில் சத்தம்...' இத்தகைய நினைவலைகள் அவன் அறிவைத் தெளிவுபடுத்தின. கண்ணனைப் பார்த்தான். குனிந்த தலையோடு அவன் நின்றுகிடந்தான். மங்களத்தைப் பார்த்தான். அவள் பயத்தோடு படுத்துக்கிடந்தாள். கண்ணம்மாவைப் பார்த்தான். அவள் பரிதாபமாகக் காட்சி தந்தாள். திடீரென்று புறப்பட்டான். வாயற்படி சென்று மீண்டும் திரும்பிப் பார்த்தான் கண்ணம்மாவை. கலைந்த சித்திரம்போல் தோன்றினாள். புறப்பட்டான். மறைந்தான்.

அடித்துவைத்த சிலையது போல் கண்ணன்— கண்ணம்மா மங்களம் மூவரும் நெடுநேரம் இருந்தனர். அந்த அமைதியைக் கலைத்தது மங்களத்தின் நீள்மூச்சு. மெள்ள எழுந்தாள். நடந்தாள் மகன் இருக்கும் இடம் நோக்கி. தடுமாறியவாறே வரும் தாயைக் கண்டதும் கண்ணன் ஓடிவந்து தாங்கிக்கொண்டான். தாயின் முகத்தைக் காணும் சக்தி இழந்திருந்தான். நிலம் நோக்கி நின்ற அவன் வடித்தகண்ணீர்த்துளிகள் மங்களத்தின் பாதங்களை நனைத்தன. மகனைத் தேற்றும் சக்தி அந்த ஏழைத் தாய்க்கு இல்லை. எனவே அவள் கண்களிலும் நீர்த்துளிகள் பொங்கி வழிந்தன. இதைக் கண்ட கண்ணம்மா கண்களும் ஊற்றுகளாயின. அதுவரையில் தொலைவில் கேட்டுவந்த மேளவாத்திய ஒலி நெருங்கிவந்தது. மூவரும் தெருப்பக்கம் நோக்கினர். ஊர்வலம் தங்கள் தெருவழியாகத்தான் வரப்போவதை அறிந்து தெருக்கதவோரம் வந்து நின்றனர். நாதசுர இசையும் தொடர்ந்து பாண்டு வாத்தியமும் மக்கள் கூட்டத்தினிடையேபோய்க் கொண்டிருந்தன.

இரவைப் பகலாக்கும் அலங்கார விளக்குகளிடையே அழகாகச் சிங்காரிக்கப்பட்ட காரின்மீது பளபளப்பான பட்டுப் புடவையும் மின்னும் நகைகளும் அணிந்து பவனி வந்துகொண்டிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்கள் இருபதாயிரத்துக்கு இருக்கும். ஆனால் அந்த ஆரணங்கு சிங்காரித்த சிலையாக இருந்தாளே ஒழிய, உற்சாகத்தோடு காணப்படவில்லை. கவிழ்ந்த தலையோடு குந்தியிருந்த குத்துவிளக்கு, தலை நிமிர்த்தினாள். பறிகொடுத்த பார்வை நிறை அவள் விழிகள் கண்ணன் வீடு நோக்கியது. பொற்றாமரை முகத்தழகி,அவள் விழிகள் குற்றாலத்து நீர் விழிச்சிகளாயின. அவள்தான் பூங்கோதை!

பூத்த புதுமலராய், வார்த்த வண்ணச் சிலையாய், ஆடிவரும் பவழத் தேராய், சிரித்துவரும் கலைக்கோயிலாய், கவிஞன் கற்பனையினின்றும் எழுந்து வந்த ஓவியமாய்த் தன்வீடு நோக்கி வந்து இன்பக்கதை பேசி மகிழ்வித்த மரகதச் சிலையவள் கண்களிலே மதனன் கணை கண்டு மகிழ்ந்த, கண்ணன், இன்று நீரோடையாய், கொய்யாக் கனியாம் கன்னங்களைக் காணும் போதுகண்ணிலே தேள்கொட்டினாற்போல்துடித்தான். நிலைமைஅவனை ஊமையாக்கியது. நெடுமரம்போல் நின்றான். இருவர் கண்களும் சந்தித்தன. இன்ப நினைவெல்லாம் இடிந்தன என்ற நினைவு அவர்கள் நெஞ்சில் தோன்றிவிட்டன என்பதைப் புரண்டுவந்த கண்ணீர் வெள்ளம் காட்டியது. பறிகொடுத்தாற்போல் வீற்றிருந்தாள் அவள். "ஆசை எண்ணங்களெல்லாம் அடியோடு இடிந்தனவே... உயிரோடு புதை குழிக்கு இழுத்துப் போவதாயினும் இந்த வேதனை அனுபவிக்க மாட்டேனே... ஐயோ ... கண்ணாளா... கண்ணுடி வீடு கட்டினோமே... கருத்திழந்தோர் கல்தூக்கிப் போடுகின்றனரே ... இதைவிடத் தூக்கு மேடைக்கு என்னை அழைத்துப்போவார்களானால் மகிழ்ச்சி பொங்கப் போவேன்" என்று பூங்கோதை வாயினால்அல்ல விழிகளினால் பேசினாள். ஊர்வலம் நகர்ந்து போய்க் கொண்டே இருந்தது. தன் உயிரை யாரோ இழுத்துப்போவது போல் கண்ணனுக்குத் தோன்றியது, நெடுமரம்போல் நின்றிருந்த அவன் பட்டுப்போன மரம்போல் சாய்ந்தான் கீழே!

உணர்ச்சியற்ற மரபொம்மையாக உட்கார்ந்திருந்த பூங்கோதை

அழைத்துச் செல்லப்பட்டாள் கல்யாண மண்பத்திற்கு. வாயப்படியில் அவள் காலடி வைத்ததும், இருளைக் கிழித்துப்பூமாரிபொழியும் வாண வேடிக்கைகள் உச்சநிலை பெற்றுத் தணிந்தன. வழியும் கண்ணீரோடு வாயற்படியினைத் தாண்டி உள்ளே சென்ருள். மல்லியாலும் முல்லையாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த் அழ்கான் மண்டபத்தைச் சுற்றிப் பார்த்தாள். அவள் கண்களுக்குத் தொங்கும் முல்லைசரமெல்லாம் சர்பங்களாகத் தோன்றின. பச்சை இலையெல்லாம் பாம்புகளாகக் காட்சி அளித்தன. அழைத்துச் செல்லப்பட்டாள். ஆலாத்தி எடுத்து நலங்கிட்டு, மணக்கும் சந்தனம் பூசி அழைத்துச் சென்றனர் அறைக்குள்ளே. பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் ஒருவரையொருவர் உபசரிக்கத் துவக்கினர். விருந்துண்டு, தாம்பூலம் தரித்து ஊரைப்பற்றியும் உறவு முறைபற்றியும் விசாரித்துப் பேசலாயினர். சிலர் நித்திரா தேவியோடு இரண்டற கலந்தனர்!!

(தொடரும்.)

"சட்டத்தில் சொட்டை திட்டத்தில் சொள்ளை"

— ச. இராமலிங்கம் எம். ஏ.

அன்புள்ள எழிலி,

நீ எழுதிய முடங்கல் கிடைத்தது. அதில் நீ கேட்டிருக்கும் கேள்விகண்டு எனக்கு, அழுவதா சிரிப்பதா எனத் தெரியவில்லை. நாம் வடக்கு வளர்கிறது, தெற்குத் தேய்கிறது என்ருல், விகடனில் யாரோ ஒருவர் தெற்கு வளர்கிறது என்று எழுதுகிருரே! என எழுதியிருந்தாய்.

எழிலி! அவர் பாவம்! தெற்கைச் சுற்றிச் சுற்றிப் பார்த்திருப்பவரே தவிர. வடக்கே சென்று பார்த்திருப்பவராகத் தெரியவில்லை. அதனல்தானே என்னவோ! "குண்டு சட்டிக்குள்ளாகவே குதிரை ஓட்டிவிட்டு 'தெற்கு வளர்கிறது' என எழுதியுள்ளார்.

நாம் வடக்கு வளர்கிறது, தெற்குத் தேய்கிறது எனச் சொல்லும்போது, வடக்கையும் தெற்கையும் ஒப்பிட்டுப் பார்த்துப் புள்ளிவிவரங்களோடு கூறுகிருேமே ஒழிய, தனிப்பட்ட முறையில், ஆதாரமற்ற வகையில் கூறவில்லை.

தென்னகத்தில் ஒருவன் இரயிலில் பிரயாணம் செய்தால் அவன் இரயிலில் இருந்து காண்பது ஏராளமான கோயில் கோபுரங்கள்தான். ஆனல் வடக்கிலோ மாபெரும் புகை போக்கிகள் தான் தெரியும். இங்கு கோயில் கோபுரங்களைக்கண்டு இது தஞ்சாவூர் இது மதுரை, இது ஸ்ரீரங்கம் எனக் கூறுவதுபோல், அங்கு புகை போக்கிகளைக் கண்டுதான் இது சிந்திரி, இது ரூர்கேலா, இது பிலாய்நகர் என்று சொல்லவேண்டியிருக்கிறது.

பார்த்தாயா எழிலி! இங்கே "உயர்ந்த கோபுரங்கள்" அதனல் தானே என்னவோ "தாழ்ந்த உள்ளங்கள்" படைத்தவர்களாக பலர் இருக்கிருர்கள்.

நாம் வடக்கு வளர்கிறது என்ருல், உடனே விகடனர் வேட்டியை வரிந்துக்கொண்டு தெற்கு மாத்திரம் என் வளரவில்லை — வேண்டுமென்ருல் பாருங்கள். வடக்கித்தியார் கட்டும் வெங்காயச் சருகு சேலை என் பேத்தி கூடத்தானே கட்டுகிருள் என்று வறட்டு ஜம்பத்திற்காகச் சொல்லுவதுபோல் இருக்கிறது, விகடனில் வரும் தெற்கு வளர்கிறது எனும் கட்டுரை. இதற்கெல்லாம் காரணம் அவர்களுடைய ஒரேகொள்கை, நாம் எது சொன்னலும் அதை எதிர்க்க வேண்டும் என்பதுதான். நேர்மையா நீதியா என்றுகூடப் பார்க்கமாட்டார்கள். பாவம்! அந்த அளவுக்குத் தேசியம் அவர்கள் கண்களை மறைத்திருக்கிறது.

ஆயினும் அந்த விகடனருக்கும் சில சமயங்களில் பார்வை தெளிவாகிறது. தெளிவாகிற காரணத்தினலோ என்னவோ அவருக்கு இது நேர்மை இது நீதி எனப் புரிகிறது. புரிந்தாலும் அவர் போட்டிருக்கும் கதர்சட்டை, அவரை உண்மையை அப்படியே அப்பழுக்கற்றதாக எடுத்துரைக்க அச்சமுண்டாக்குகிறது. தைரியமாக எந்த ஒரு நீதியையும் எடுத்துரைக்க முடியவில்லையானலும், நம்மோடு பழகிய காரணத்தினலோ என்னவோ, அச்சம் தைரியம் கலந்த வகையில் எழுதியிருக்கிருர், இந்த வாரத்தில் தலையங்கம் "இது சரியல்ல" என்று.

சரியல்ல என்று எழுதிய விகடனருக்கு இது தவறுதான் என்று எடுத்துரைக்கத் திறனுமில்லை, துணிவுமில்லை.

எழிலி! நம் நாட்டிலேயே நடந்த பெரிய ஊழல் உனக்குத் தெரிந்திருக்கும், "முந்திரா பேர ஊழல்" அந்த ஊழலில் ஏற்பட்ட அரசியல் சுழல்களில் சிக்கியவர் பலர் இருப்பினும், இந்த ஊழலுக்குக் காரணமாக இருந்தவர்கள் மூவர் என்று தெரிந்திருந்தும், கடைசியாக நடந்த கமிஷனின் தீர்ப்பு அந்த "மும்மூர்த்தி"களுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது.

"ஏழை ஒருவன் ஒரு செம்பையோ ஒரு மேல் துண்டையோ திருடிவிட்டால், ஆறு மாதம் சிறைக்கு அனுப்புகிறது பொதுச் சட்டம் — ஆனல் ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கும் பொறுப்புள்ள அதிகாரிகள் இலட்சக் கணக்கான தொகையை ஏப்பமிட்டாலும் விதிகள் அவர்களைக் காப்பாற்றத் தயாராக இருக்கின்றன.

பார்த்தாயா எழிலி! அவர்க்குக் கூடப் புரிந்துவிட்டது. வடவர்களின் ஆணவப்போக்கு — புரிந்துகொண்டு உள்ளம் குமுற மேலும் எழுதுகிருர் விகடனர்,

"சர்க்காரில் இலஞ்சமும் ஊழலும் மலிந்து இருப்பதை எடுத்துக்காட்டினலும்கூட, அதை ஒப்புக்கொள்ளாமல் மறைக்க அவர்களிடம் விதியும் சட்டமும் இருக்கிறது என்று மக்கள் குறைகூற இடம் அளித்துவிட்டது இந்த நிகழ்ச்சி"

உண்மையை எடுத்துரைத்தாலும் அவற்றை மறைக்க விதியின் சட்டமும் அவர்களிடம் இருக்கிறது என்ருல், அந்தச் சட்டம் எதற்கு? நீதியை நிலைநாட்டாத சட்டம், நேர்மையைக் கடைபிடிக்காத சட்டம் "எட்டி பழுத்தாலும் என்ன பயன்" என்பதுபோல் இந்தச் சட்டங்கள் இருப்பது எதற்கு?

எழிலி! ஏற்கனவே நான் உனக்கு எழுதியிருந்தேன், சட்டத்தைச் சாணம் போல் நினைக்கும இந்த ஆட்சியாளர்களின் போக்கு, ஆணவத்தையும் எதேச்சாதிகாரத்தையும தான் காட்டுகிறதே ஒழிய வேருென்றுமில்லையென்று.

நீதிதான் இவர்களுக்குத் தெரியாது என்ருல் நிதியையாவது ஒழுங்காகப் பயன் படுத்துகிருர்களா என்ருல் அதுவுமில்லை!

தெற்குக்குத் துரோகம் செய்து வடக்குக்குவானளாவும்தொழிற்சாலைகள் எழுப்பும் இந்த ஆட்சியாளர்கள், அந்த ஒருஆக்க வேலையையாவது சரியாகச் செய்கிருர்களா என்ருல் அதுவுமில்லை.

வடக்கிலே 138 கோடி ரூபாய் செலவில் அமைய இருக்கும் துர்காபூர் இரும்புக் கூடம் சரியான முறையிலே அமைக்கப்படவில்லையாம். அதனல் மாபெரும் நஷ்டம் என்று ஒரு பத்திரிகை கூறுகிறது.

அதோடு மாத்திரமல்ல! இன்று சௌராஷ்டிராவில், சோரத் மாவட்டத்தில், பாட்டாளி மக்களின் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த சம்பாதித்துத் தந்த வரிப்பணத்தில் கட்டிய

'ஹிராள்' அணைக்கட்டும் சரியான முறையில் கட்டப்படவில்லையாம். இதனால் எழுபது இலட்சம் ரூபாய் பாழ் என்று தெரிகிறது.

இதைப்போன்று 2.3 கோடி ரூபாய் சிந்திரியில் பாழாகிறது. 2.3 கோடி ரூபாய் செலவில், ஜெர்மானியரிடமிருந்து 1949ல் வாங்கிய "மெதனால் பிளான்ட்" இன்னும் உபயோகப்படுத்தாமல் காற்றிலும் வெயிலும் காய்ந்து, பாழாகும்படி விட்டு வைத்திருக்கிறார்களாம். இப்படிப் பாழாகும்படி பாதுகாப்பதற்கு வருடத்திற்கு ரூபாய் எண்பதாயிரம் செலவிடப்பட்டதாம்.

இப்படி, பாழாக்கும் திட்டங்களை அடுக்கிக்கொண்டே போனால், இவர்களின் ஐந்தாண்டுத் திட்டங்கள் எல்லாம் மூழ்கிவிடும் போலிருக்கிறது!

நாட்டிற்குச் சரியான சட்டங்கள் தான் தீட்டத் தெரியவில்லை என்றால், திட்டங்களாவது ஒழுங்காகத் தீட்டுகிறார்களா என்றால் அதுவுமில்லை. இந்த அழகில், நாம் பிரிவினை கேட்டு, முரசொலி எழுப்பினால், நம்மைக் கண்டு ஏளனப் புன்னகை புரிந்து, நம்மையெல்லாம் காட்டி "இந்தத் தி. மு. க. வினர் யார் தெரியுமா? ஒரு காலத்தில் ஆங்கிலேயனின் அடிவருடிகள்—அவர்களிடம் ஒரு திட்டமும் கிடையாது" என்று கூறுகிறார் ஒரு கனம் மந்திரியார்.

எழிலி! தாங்கள் போடும் இந்த ஓட்டை உடைசல் திட்டங்களை மறைக்கத்தான் இன்று இவர்கள் நம்மிடம் என்ன திட்டமிருக்கிறது என்று கேட்கிறார்கள். இவர்கள் போடும் இந்த உதவாக்கரைத் திட்டங்களைக் கண்டு மக்கள் இன்னும் சில நாட்களில் "ஐயனே! மெய்யனே நீங்கள் திட்டங்கள் வகுத்தால் சரியானதாக இருக்கட்டும் — இப்படி ஓட்டை உடைசல் திட்டங்கள் வகுப்பது என்றால் தயவுசெய்து ஆட்சிப் பீடத்தை விட்டு இறங்குங்கள்" என்று சொல்லத்தான் போகிறார்கள்.

இனிச் சொல்லப்போவது என்ன இருக்கிறது, மாநகராட்சி மன்றத் தேர்தலிலேயே மக்கள் காட்டிவிட்டார்களே என்று உனக்குச்சொல்லத் தோன்றுகிறது! எழிலி! நமக்குக் கிடைத்திருக்கும் இந்த வெற்றி சாதாரண வெற்றிதான். இதையே நம்முடைய முழுவெற்றி என்று நாம் ஆயாசப்பட்டு அலுத்து அமர்ந்துவிடக்கூடாது! இனித்தான் நமக்குப் பொறுப்புணர்ச்சியும் கடமையும் அதிகமாக இருக்கிறது! என்ன, நம்மை ஆங்கிலேயனின் அடிவருடிகள் என்று சொன்னதைக் கண்டு கொள்ளாமல் கடமையையும் பொறுப்புணர்ச்சி பற்றியும் அதிகமாக எழுதுகிறீர்களே என்று நினைக்கிறாய்!

நீதியும் தெரியாது! நிதியைச் சரியாகப் பயன்படுத்தவும் தெரியாது! இந்த அழகில் அரசாளும் இந்தக் கோலேந்திகளும் அவர்களின் துந்துபிகளும் நம்மைக்கண்டு என்ன சொன்னால் என்ன! நாம் இவர்களின் கூச்சல்களைக் கவனியாது, நம் கொள்கைகளை மறவாது நம் இலட்சியத்தை அடைய முயல்வோமாக.

உன் அன்புள்ள,

இன்பன்.

❀

4-ம் பக்கத் தொடர்ச்சி

முறையைப் பற்றிய சிறு நூல் ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றார். தமிழ்க் கிருஸ்தவர்களில் சிலர் இந்நாட்களில் பல்கலைக் கழகங்களில் தமிழ்த் தேர்வுபெற்று, ஆங்காங்கே உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியராகவும் பேராசிரியராகவும் இருந்து தத்தமக்கேற்ற துறைகளில் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் கூட்டியுள்ள தொகைநூல் மாநாடுகளில், **ஜெபரத்தினம், அருளப்பன்** என்ற கிருஸ்தவப் புலவர்களும் இடம் பெற்று, நிகழ்த்திய சொற்பொழிவுகளும் வெளிவந்துள்ளன. ஜெபரத்தினம் என்பவர் பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் தமிழாசிரியராகவிருந்து வருகின்றார், **இளங்கோஉள்ளம்** என்னும் ஆராய்ச்சி நூலும் சிலப்பதிகாரத்தைப்பற்றி வெளியிட்டுள்ளார்.

தனிநாயகம்

இன்றைய கிருஸ்தவத் தமிழ்ப் புலவர்கள் வரிசையில் **தனிநாயக** அடிகளுக்குத் தனியிடம் உண்டு என்றால், அது மிகையாகாது. இப்போது ஆங்கிலத்தில் வெளிவந்துலவும் **தமிழ்ப் பண்பாடு** என்னும் உயரிய மும்மாத வெளியீட்டிற்குத் தந்தையெனக் கொள்ளத்தக்கவர் அவரே. மேலும் ஆங்கிலத்தில் பண்டைய தமிழில் காணும் இயற்கை என்ற தலைப்புடன் ஒரு சீரிய ஆராய்ச்சி நூலும் வெளியிட்டிருக்கின்றனர். தவிரவும், கிழக்கிலும் மேற்கிலுமுள்ள பல நாடுகளுக்குச் சென்று தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு இவற்றைப்பற்றிச் சொற்பொழிவாற்றியும் எழுதியும், ஆராய்ந்தும் வருகின்றார்.

இசைத் துறையில் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் குமாரர் **ஜோதிப்பாண்டியன்** என்பவர் மேனாட்டு இசையினையும் தென்னாட்டு இசையினையும் ஆராய்ந்து, மேனாட்டு முறையினைத் தென்னாட்டு இசையில் இணைத்துக் காட்டியுள்ளனர் **திருமதி மான்ஸ்** என்னும் அம்மையார் இத்துறையில் சில ஆராய்ச்சிகள் செய்துள்ளார். **நடராச பாகவதர்,** அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைப் புலவர் பட்டம் பெற்றவர். இசையில் மறுமலர்ச்சிக்காக அருமுயற்சி செய்து வருகின்றார். திவாகரத்தில் கண்டுள்ள ஆ, ஈ, ஊ. ஏ, ஐ, ஓ, ஔ என்னும் இசையெழுத்துக்களை உயிர்ப்பித்து, தமிழ்ப் பண்களைக் கண்டு பிடித்து, திருவள்ளுவர் முதல் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஈறுகவரும் புலவர்களின் பாடல்களை எல்லா மக்களும் கேட்டின்புறும்படியாகப் பரப்பி வருகின்றார். **சென்னைக் கிருஸ்தவ இலக்கியக் கழகமும்** பல துறையில் தமிழுக்குத் தொண்டாற்றி வருகின்றது. புதிய தமிழ் நாட்டில், புதுப் புது முறைகளில் கிருஸ்தவத் தமிழ்த் தொண்டு சிறந்து விளங்கும் என்பதற்கு ஐயமின்று!

★

மறைவு

சின்ன காஞ்சீபுரம், சப்போஸ்ட் மாஸ்ட்டர் W. S. பாலகிருஷ்ணனின் தகப்பனார் W. S. இரத்தினவேலு அவர்கள் சிலநாள் நலிவாயிருந்து 9-6-59 இயற்கை அடைந்துவிட்டார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

காஞ்சிபுரம், 93, [illegible] திராவிடநாடு அச்சகத்தில் [illegible] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.